முச்சந்தி முரளி




"இந்தமுறை எலக்சன் எக்ஸாமில ஆரெல்லாம் பாஸ்பண்ணப் போயினமெண்டு தெரியாமல் கிடக்கு கண்டியளோ"


Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 352

புதன்கிழமை
13 நவம்பர் 2024

ஐப்பசி 27
வள்ளுவர் ஆண்டு 2055




தீவிரமான கண்காணிப்பில் நாடு

# தேவையேற்பட்டால் முப்படை இறங்கும்

தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

**கொழும்பு, நவம்பர் 13**

**பொதுத்தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் கண்காணிப்பும், பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. தேவையேற்பட்டால் முப்படைகளும் களமிறக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.**


15


## புதன்பொய்கை

வாக்கெண்ணும் நிலையமான

## யாழ். மத்தியில் நேற்று ஆராய்வு



யாழ்ப்பாணம், நவ. 13
நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்றுக் கள ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
யாழ்.மாவட்டப் பதில் செயலரும், தெரி


15




## தேர்தலை எதிர்கொள்ள சகல ஏற்பாடுகளும் தயார்

யாழ், தெரிவத்தாட்சி அலுவலர் ம.பிரதீபன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 13
தேர்தலுக்காக யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் தயார் நிலையில் உள்ளது. வாக்குச்சீட்டு, வாக்குப்பெட்டி மற்றும் இதர ஆவணங்கள் நாளை காலை (இன்று) சிரேஷ்ட தலைமை அலுவலர்களிடம்


15


## முறைப்பாடு 3,000

கொழும்பு, நவ. 13
நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் இதுவரை 3 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்


15


## 12 வாக்களிப்பு நிலையங்கள் இம்முறை மாற்றப்பட்டுள்ளன!

யாழ்ப்பாணம், நவ. 13
யாழ்ப்பாணத்தில் இம்முறை பொதுத்தேர்தலின்போது, கடந்த காலங்களில் வாக்களிப்பு நிலையங்களாக செயற்பட்ட 12 நிலையங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


15


## கிணற்றிலிருந்து சடலமொன்று மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 13
யாழ்ப்பாணம், மயிலங்காடு பகுதியில் தோட்டக் கிணற்றில் இருந்து குடும்பத்தலைவர் ஒருவர் சடலமாக


15




## அரசியல்கைதிகளின் விடுதலை ஆராய்வு!

கொழும்பு, நவ. 13
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருவதாக ஜனாதிபதி செயலக சட்டத்துறை பணிப்பாளர் விஜயபண்டார தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஆங்கில ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


15


## நெடுந்தீவின் வாக்குகள் ஹெலிகொப்டரில் வரும்

யாழ்ப்பாணம், நவ. 13
நாடாளுமன்றத் தேர்தலில் நெடுந்தீவுப் பிரதேசத்தின் வாக்குகள் ஹெலிகொப்டர் மூலம் வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு எடுத்துவரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


15


## இலங்கைக்கு எதிராக பொருளாதாரத்தடை!

சீமான் கோரிக்கை

சென்னை, நவ. 13
இலங்கை மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கவேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.


15


## இலங்கைச் சிறைகளில் எப்போதும் தமிழக மீனவர்கள் இருக்கவேண்டுமா?



கொழும்பின் கபடத்தனம் இதுவென அன்புமணி ராமதாஸ் குற்றச்சாட்டு

சென்னை, நவ. 13
தமிழக மீனவர்கள் இலங்கைச் சிறைகளில் இருக்கவேண்டும் என்பதே இலங்கை அரசின் கபடத்தனமான நோக்கம் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரான அன்புமணி ராமதாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.
அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்துக்காக இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 23 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு


15


## 12 இந்திய மீனவர்கள் நேற்றுக் காலை கைது

யாழ்ப்பாணம், நவ. 13
அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் 12 பேர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.


15





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிரந்தரத் தீர்வை அடைய உரிமையைப் பிரயோகிப்போம்

## பொ.பொ. பேரெழுச்சி இயக்கம் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், நவ.13**

**நவம்பர் மாதம் 14 ஆம் திகதி சிறிலங்காவின் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. எமது அரசியல் நிலைப்பாட்டை இந்தத் தருணத்தில் உறுதியாக வெளிப்படுத்தவேண்டியது ஒவ்வொரு தமிழனுக்குமுரிய தலையாய கடமையாகும். நிரந்தரமான தமிழர்தேசம் இந்தப் பூமிப்பந்தில் உதிக்க உறுதிபூணுவோம்.**

- இவ்வாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த இயக்கம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று சிறிலங்காவின் பேரினவாதக் கட்சிகள் தாமே தமிழ்மக்களின் மீட்பர்கள் போலவும், தமிழ்மக்களுக்கு அரசியல் பிரச்சினை எதுவுமே இல்லை என்பது போலவும் ஒரு மாயத் தோற்றத்தினை எம்மக்களிடையே, குறிப்பாக இளைய சமுதாயத்தைக் குறிவைத்தே விதைக்கின்றனர்.

இடதுசாரிகளாகத் தம்மை வெளிப்படுத்தும் இவர்கள் ஈழத்தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ள என்றுமே தயாராக இல்லை. இவர்களை எமது தாயகத்திலிருந்து முழுமையாக அகற்றவேண்டிய தலையாய கடமை ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு.

தமிழ்மக்களின் இனப் பிரச்சினைக்கு எமது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிப்பதனூடாக எட்டப்படும் தீர்வே நிரந்தரமாக அமையும். அதன் ஒரு பொறிமுறையாக, தமிழ்மக்களிடையே சர்வதேசத்தினால் நடத்திக் கண்காணிக்கப்படும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பினூடாகவேதான் ஒரு நிரந்தர அரசியல் தீர்வை அடைய முடியும் என்பதை நாம் திடமாக நம்புகின்றோம்.

எனவே நிரந்தரமான தமிழர்தேசம் இந்தப் பூமிப்பந்தில் உதிக்கத் தொடர்ந்தும் பாடுபடுவோம் என உறுதி எடுத்துக் கொள்வோம் -என்றுள்ளது. (ச-66)



## ஹெரோய்னுடன் சட்டத்தரணி கைது

கொழும்பு, நவ.13

அநுராதபுரம் பிரதேசத்தில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் சட்டத்தரணி ஒருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 2 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

ஈஸ்டர் தாக்குதல் குறித்த

## சனல் -4 காணொலி சி.ஐ.டி. விசாரணை

கொழும்பு, நவ.13

ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் வெளிநாட்டு தொலைக்காட்சியான சனல்-4 இல் ஒளிபரப்பான காணொலி தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வெளி அமைப்பு ஒன்றால் காணொலி தொடர்பில் பொதுப் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்ட முறைப்பாடு பொலிஸ் தலைமையகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட பின்னர் விசாரணைக்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய தொலைக்காட்சியான சனல் - 4 தொலைக்காட்சி, இலங்கையரான அசாத் மௌலானா என்ற மொஹமட் மிஹிலால் மொஹமட் ஹப்சீருடன் நேர்காணல் ஒன்றை நடத்தியது. இந்த நேர்காணல் கடந்த ஆண்டு ஒளிபரப்பப்பட்டது.

குறித்த காணொலியில் இடம்பெற்றுள்ள ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சர்ச்சைக்குரிய விடயங்கள், குற்றவியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சதி உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-இ)

தேர்தலையொட்டி

## குறிகாட்டுவான் - நெடுந்தீவுக்கு விசேட படகுச் சேவைகள்

யாழ்ப்பாணம், நவ.13

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, யாழ்ப்பாணம், குறிகாட்டுவான் - நெடுந்தீவுக்கு இடையிலான விசேட படகுச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையில் குறிகாட்டு வானில் இருந்து நெடுந்தீவுக்கு 7 படகுச் சேவைகள் இடம்பெறவுள்ளன.

அதேபோன்று நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி காலை 6.45 மணி முதல் மாலை 4.30 மணி வரையிலும் படகுச் சேவைகள் இடம்பெறவுள்ளன என நெடுந்தீவு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

அதேவேளை நெடுந்தீவுக்கான வாக்குப்பெட்டிகளை இன்று புதன்கிழமை படகுகள் மூலம் உத்தியோகத்தர்கள் எடுத்துச் சென்று நாளை வியாழக்கிழமை வாக்களிப்பு நிறைவு பெற்றதும் விமானப் படையினரின் உலங்குவானூர்தியில் வாக்கெண்ணும் மத்திய நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு எடுத்துவரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-66)



## வானிலை ஆய்வுமைய இணையம் 'ஹக்'

கொழும்பு, நவ.13

வளிமண்டலவியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் 'ஹக்' செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, இணையத்தளத்தை மீளமைக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## தொழில்நுட்பப் பணியாளர் நாட்டில் பற்றாக்குறை!

கொழும்பு, நவ.13

தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களின் வெளியேற்றம் காரணமாக வெளிநாடுகளிலிருந்து தகவல் தொழில்நுட்பத் துறைக்கு நடுத்தர முகாமைத்துவப் பணியாளர்களை அழைப்பதற்கு அரசாங்கத்தின் அனுமதியைக் கோரியுள்ளதாகத் தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களின் சங்கத்தலைவர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

நாட்டில் அதிகரித்துள்ள வரிச்சுமை மற்றும் வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு என்பன காரணமாக தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பலர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இதனாலேயே வெளிநாடுகளிலிருந்து தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களை அழைக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களில் பெரும்பாலானோர் சிங்கப்பூருக்கு புலமைசார் தொழில் விசாவில் சென்றுள்ளனர். சிங்கப்பூரில் வாழ்க்கைத்தரம் சிறப்பாகக் காணப்படுவதாலேயே தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

# குறுஞ்செய்தி பிரசாரம் சட்டநடவடிக்கை பாயும்

கொழும்பு, நவ.13

வேட்பாளர்களின் பெயர் மற்றும் போட்டி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு தொலைபேசி இலக்கங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் குறுஞ்செய்திகள் மற்றும் சமூக ஊடகங்களில் முன்னெடுக்கப்படும் பிரசாரங்கள் தொடர்பில் எதிர்வரும் இரு நாள்களுக்கு கடுமையான சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இதுதொடர்பில் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் நேற்று பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க தெரிவித்தார். தேர்தல் பிரசார நோக்கில் குறுஞ்செய்திகளை அனுப்பும் செயற்பாடுகளின் பின்னணியில் இருக்கும் நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் அட்டைகளின்றி வாக்களிப்பதற்கு வாய்ப்பு



கொழும்பு, நவ. 13
உத்தியோகபூர்வ வாக்காளர் அனுமதி அட்டைகள் இன்றியும் வாக்காளர்கள் தமது வாக்குகளைச் செலுத்தலாம் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் ஆர். எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுவரை வாக்காளர் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் தங்களுக்குக் கடிதம் கிடைக்கின்ற தபால் அலுவலகங்களுக்குச் சென்று தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். அதேவேளை 2024 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் பெயர்கள் பதிவு செய்யப்பட்டவர்களும் வாக்களிக்கமுடியும். வாக்களிப்பதற்குத் தகுதியான எந்தவொரு அனுமதி அட்டையும் இல்லாதவர்களுக்கு தேர்தல்கள் அலுவலகத்தின் ஊடாக தற்காலிகமாக ஓர் அடையாள அட்டை வழங்கப்படும். இம்முறை தேர்தலில் வாக்களிப்போரின் இடது கை சுட்டு விரலில் மை பூசப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-25, சி)

தேர்தலைக் கண்காணிக்க

## 20 நாடுகளிலிருந்து கண்காணிப்பாளர்கள்

கொழும்பு, நவ.13
நாளை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை கண்காணிப்பதற்காக 20க்கும் மேற்பட்ட வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் பங்கேற்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதில் தெற்காசிய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்களும் அடங்குவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில் மேலதிகமாக 10 வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் இலங்கை வரவுள்ளனர். இதில் ரஷ்யா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளின் கண்காணிப்பாளர்கள் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

## தேர்தல் பாதுகாப்புக்கு பொலிஸார் தயார்

கொழும்பு, நவ.13
பொதுத்தேர்தலின் பாதுகாப்புக்காக பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். அதற்காக, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வாக்குச் சாவடிகளிலும் சுமார் 64 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். சுதந்திரமானதும் அமைதியானதுமான தேர்தலை நடத்துவதற்குத் தேவையான ஆதரவை வழங்குமாறும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (ச-இ)

தட்டுப்பாட்டை நீக்க

## பியர் உற்பத்திக்கு அரிசி இறக்குமதி?

அரிசித் தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக பியர் உற்பத்திக்குத் தேவையான நாட்டரிசியை இறக்குமதி செய்யுமாறு பியர் உற்பத்தியாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்போவதாக விவசாய அமைச்சின் செயலர் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பியர் உற்பத்திக்கு நாட்டரிசி பயன்படுத்தப்படுகிறது. பியர் உற்பத்திக்கு நாட்டரிசியை பயன்படுத்த வேண்டாமென நாங்கள் பியர் உற்பத்தியாளர்களைக் கோரமுடியாது. எதிர்காலத்தில் உற்பத்தி செய்யப்படும் நாட்டரிசியை உணவுத்தேவைக்கு மட்டும் பயன்படுத்தத் தீர்மானித்துள்ளோம். உணவுத்தேவைக்கு மேலதிகமாக நாட்டரிசி உற்பத்தி செய்யப்படும் பட்சத்தில் அதனை பியர் உற்பத்திக்குப் பயன்படுத்தத் தீர்மானித்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)



## அமெ.சிறப்புத்தூதுவர் இலங்கைக்கு வருகை

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலக இளையோர் பிரச்சினைகளுக்கான சிறப்புத் தூதுவர் அபி பின்கெனவர், இலங்கை மற்றும் நேபாளத்துக்குப் பயணம் செய்யவுள்ளார்.
இலங்கையின் கூட்டுறவின் மூலம் கல்வி, தலைமைத்துவம் மற்றும் குடியுரிமைப் பங்கேற்பு போன்ற துறைகளில் இளம் தலைவர்களை ஊக்குவிக்கும் திட்டங்களின் தாக்கத்தை இந்தப் பயணத்தின்போது சிறப்புத் தூதுவர் பின் கெனவர் அவதானிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# தென்னக்கோன் நியமனம் ஜனாதிபதி கவனத்துக்கு

பொலிஸ்மா அதிபராக தேஷபந்து தென்னக்கோனை நியமிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை ரத்துச் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் நியமனம் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு பற்றித் தெரிந்து கொள்ளுமாறு சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளார். பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்டவர். இவரது நியமனத்துக்கு எதிராக கொழும்பு ஆயர் மல்கம் ரஞ்சித்தும், இளம் பத்திரிகையாளர் சங்கமும் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தன.
இந்த நிலையில் குறித்த மனு மீதான விசாரணையின்போது சட்டமா அதிபர், பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் நியமனம் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு பற்றித் தெரிந்து கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.
வழக்கின் விசாரணைகள் இம்மாதம் 24,25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (ச-6)




சுவருக்கும் காதிருக்கும் எண்டு சொல்லக் கேள்விப்பட்டிருப்பியள். ஆனால் காது இருக்கிற கதிரையளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீங்களோ. காது மட்டுமில்ல, இந்தக் கதிரையளுக்கு வாக்களிக்கிற உரிமையும் இருக்குதாம். இப்பிடியான அதிசயக் கதிரையளை இந்தமுறை எலக்சன் பிரசாரக் கூட்டங்களில பாவிச்சிருக்கினம். முந்தநாள் பிரசாரம் செய்யிறதுக்கு கடைசிநாள் எண்டதால எல்லாக் கட்சியளும் பெருமெடுப்பில ஆக்களைக் கூடியந்து கூட்டம் வைச்சு தங்கட பவர் என்ன எண்டதைக் காட்ட வெளிக்கிட்டவை. ஆனால் 44 தரப்புகள் போட்டி போடுற யாழ்ப்பாணத்தில எந்தக் கூட்டத்துக்கு எண்டு சனங்கள் போறது? யாழ்ப்பாணத்தில ஒரு பெரிய கட்சியும் தன்ர கடைசிக் கூட்டத்தை வைச்சது. முந்தியெண்டால் அந்தக் கட்சியின்ர கூட்டமெண்டு கேள்விப்பட்டாலே சனம் அள்ளுப்பட்டுக்கொண்டு போன காலமும் இருந்தது. வாழ்ந்து கெட்ட குடும்பம் மாதிரி இப்ப அந்தக் கட்சி உடைஞ்சு குட்டிசுவரா இருக்கேக்க ஆர்தான் எட்டிப்பார்ப்பினம்? அது அந்தக் கட்சியில இருக்கிறவைக்கே நல்லாத் தெரியும்.

அதால காசு, சாப்பாடு எண்டு குடுத்து ஆக்களை வேற ஏரியாக்களில இருந்து கூட்டிக்கொண்டு வந்தவை. பகிடி என்னெண்டால், நாலைஞ்சு நாளைக்கு முதல் ஜனாதிபதியின்ர கூட்டத்துக்கு பஸ்ஸில ஆக்களைக் கொண்டந்து படம் காட்டினவை எண்டு இதே கட்சிக்காரர் தான் நக்கலடிச்சவை. கடைசியா அவையும் பஸ்ஸில ஆக்களை ஏத்தி இறக்க வேண்டியதாப் போட்டுது. தானா வாற கூட்டத்துக்கும் இப்பிடி சாப்பாடு, காசு குடுத்துக் கூட்டியாற ஆக்களுக்கும் வித்தியாசம் இருக்குதானே. அவையள் தங்கட கையுக்கு காசும், சாப்பாட்டுப் பார்சலும் வந்தவுடன நடையைக் கட்ட வெளிக்கிட்டினமாம். கூட்டத்தை ஏற்பாடு செய்தவை போய் கெஞ்சிப் பார்த்தும் அவையள் நிக்கேலையாம். 'வீட்டில கனக்க வேலையிருக்கு. காசெண்டதாலதான் அதை விட்டிட்டு வந்தம். இவ்வளவு நேரம் நிண்டதுக்கும் தந்த காசுக்கும் சரியாப் போட்டுது' எண்டு அவை போட்டினம்.

கூட்டம் தொடங்கி ஒருமணித்தியாலத்துக்குப் பிறகு மேடையில பத்துப்பேரும் கீழ நலைஞ்சுபேரும், நானூறு கதிரையளும் தான் இருந்திருக்கு. அப்ப கூட மேடையில இருந்த வேட்பாளருக்கு பிரசாரப் பசி அடங்கேலை. ஆக்கள் இல்லாட்டி என்ன, கதிரையள் இருக்குதானே எண்டு அவையள் மூலம் தள்ளத் தள்ள கத்திப் பேசி தங்கட வித்துவத்தைக் காட்டியிருக்கினம். அந்த வீடியோக்கள் பேஸ்புக்கிலயும் பரவுது. அப்பிடி ஒரு பதிவிலதான் ஒருத்தர் 'எங்கட ஊர்க் கதிரையளுக்கு இப்ப காதும் கேக்கும், வாக்குரிமையும் இருக்கு' எண்டு கொமண்ட்ஸ் போட்டிருக்கிறார். அப்பிடியில்லாட்டி இப்பிடி ஆக்களில்லாத கூட்டத்தில மணித்தியாலக்கணக்கில தொண்டை வத்துமட்டும் கத்துறதுக்கு எங்கட ஆக்கள் மொக்குக் கூட்டமில்லைத்தானே?



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரின் எதிர்காலத்துக்காக வாக்குரிமையைப் பயன்படுத்துக

## மன்னார் பிரஜைகள் குழு தெரிவிப்பு



**கொழும்பு, நவ.13**

**மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்கள் அனைவரும் தமது வாக்குரிமையை சிறந்த முறையில், நல்ல தலைவர்களை மக்களை மதிக்கின்ற தலைவர்களை தெரிவு செய்ய உங்கள் வாக்குகளை பயன்படுத்தவேண்டும் என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் எஸ். மார்க்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.**

மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக் மன்னார் மாவட்டம் இலங்கையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக காணப்படுகின்றது. இங்குள்ள மக்களின் எதிர்கால வாழ்க்கை, வாழ்வுரிமை, ஏனைய உரிமைகள் சம்பந்தமான தீர்மானத்தைத் எடுக்கக் கூடிய ஒரு தேர்தலாக இந்த நாடாளுமன்றத் தேர்தல் விளங்குகின்றது. எனவே மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்கள் அனைவரும் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி மக்களை மதிக்கின்ற தலைவர்களை தெரிவுசெய்ய வேண்டும் - என்றார். (ச-56)



## தீட்சை வழங்கும் நிகழ்வு

யாழ். நவ.13

சைவ சமய தீட்சை வழங்கும் நிகழ்வு சைவபரிபாலன சபையின் கல்லூரி வீதி நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-45-10)

## உடுப்பிட்டி மகளிர் சாதனை

யாழ்ப்பாணம், நவ.13

திருகோணமலை சென் ஜோசப் கல்லூரியில் நடைபெற்ற இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பரதநாட்டியக் குழு நடனப் போட்டியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகள் முதலிடத்தைப்பெற்றுள்ளனர். (ச-45-555)

## செல்லப்பா சுவாமி குருபூசை நிகழ்வு

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

திருமுறைகள், நற்சிந்தனைப் பாடல்களைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு 'சிவஞான சித்தர் யோகர் சுவாமிகள்' எனும் நூல் பற்றி அறிமுகம் இடம்பெறவுள்ளது. நூலின் அறிமுக உரையை பேராசிரியர் என். சண்முகலிங்கம் நிகழ்த்தவுள்ளார். (ச-10)



## புதிய அதிபர் கடமையேற்பு

யாழ்ப்பாணம், நவ. 13

போக்கட்டி அ.த.க. பாடசாலையில் கடந்த 8 ஆண்டுகளாகக் கடமையாற்றிய அதிபர் தி.அபராஜிதன், இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தின் புதிய அதிபராக கடமையேற்றுள்ளார். இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் தென்மராட்சி வலயக்கல்வி ஆசிரிய ஆலோசகர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-159)

## அமைதிப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், நவ.13

உலக அமைதி தினத்தை முன்னிட்டு அமைதிப் பிரார்த்தனை நிகழ்வு அதிபர் தலைமையில் கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் அன்பு, அமைதி, அகிம்சை ஆகிய பண்புகளின் சக்தி குறித்து உதவி அதிபர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி உரையாற்றினார். (ச-45-159)



## மரக்கறிகளின் விலை சடுதியாக உயர்வு

கொழும்பு, நவ.13

சந்தையில் மரக்கறிகளின் விலை மீண்டும் உயர்வடைந்துள்ளதாக பொருளாதார மத்திய நிலையங்கள் தெரிவித்துள்ளன. இந்த நாளகளில், பொருளாதார மத்திய நிலையங்களுக்கு வரும் மரக்கறிகளின் இருப்பு படிப்படியாக குறைந்து வருவதால் அவற்றின் விலை உயர்வடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். திடீர் பணவரவு மகிழ்ச்சி தரும். செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மனஸ்தாபம் நீங்கும்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகாலட்சுமியை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை எதிர்பார்த்ததைவிடவும் குறைவாகத்தான் இருக்கும். விநாயகரை வழிபடுவது நலம் சேர்க்கும்.

**கடகம்:** காரியம் இழுபறியாக முடியும். காரியங்களில் வெற்றியும் உண்டாகும். உடல் அசதி உண்டாகும். விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுவதுடன் இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். வார்த்தைகளில் நிதானம் அவசியம். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடிந்துவிடும். மனதில் அவ்வப்போது குழப்பம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். செலவு செய்ய வேண்டி வரும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும். மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக்கொள்வார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவைப்படும். செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். சில சங்கடங்களும் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு இழுபறியானாலும் சாதகமாக முடியும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## மாற்றத்துக்காக வாக்களியுங்கள், மாற்றார்களுக்கல்ல!

நாடாளுமன்றத் தேர்தலுக்கான பரப்புரைக் காலம் முடிவடைந்துவிட்டது. வேட்பாளர்களும், அவர்களின் ஆதரவாளர்களும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தேர்தல் பரப்புரை செய்வது தடைசெய்யப்பட்டிருக்கின்றது. நாடாளுமன்றத் தேர்தல் நாளை நடைபெறவிருக்கும் நிலையில் வாக்காளர்கள் சுயமாகச் சிந்தித்து வாக்களிப்பதற்கு ஏற்றதாக இந்த மௌனகாலம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. கடந்த காலங்களை விடவும் இம்முறை நாடாளுமன்றத் தேர்தல் வித்தியாசம் மிக்கதாகவும், தீர்மானம் மிக்கதாகவும் மாறியிருக்கின்றது. தெற்கிலும் சரி, வடக்கிலும் சரி இந்தத் தேர்தல் முடிவுகள் எதிர்பார்ப்பு மிக்கனவாக மாறியிருக்கின்றன. தெற்கில் தோன்றியிருக்கும் மாற்றம் என்ற அலை, கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளில் எதிரொலித்தது. யாரும் எதிர்பாராதவகையில் நாட்டின் ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கின்றார். நாட்டில் ஊழலற்ற அரசாங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்படவேண்டும், கடந்தகாலங்களில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டு நாட்டைக் குட்டிச்சுவராக்கியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என்று மக்கள் மனங்களில் ஏற்பட்ட மாற்றம், தெற்கின் பழம்பெரும் தேசியக் கட்சிகளை ஓரங்கட்டுவதற்கு முக்கியமான காரணியாக இருந்தது.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் காணப்பட்ட மாற்றத்தின் அலை இப்போதும் தொடரும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பாதிப்புகள் தெற்கு மக்களுக்கு புதிது என்பதால் அவற்றின் தாக்கங்களை எதிர்கொண்டுள்ள அவர்கள், புதியதொரு மாற்றத்தை நோக்கியே சிந்திக்கக்கூடும். இந்த மாற்றத்துக்கான அலையில் நாட்டின் சிறுபான்மை மக்களான தமிழ் மக்களும் பங்கெடுக்க வேண்டும் என்ற குரல்கள் தெற்கில் இருந்து எழுந்திருக்கின்றன. ஆனால் வெறுமனே பொருளாதார நெருக்கடியையும், அவற்றுக்கான தீர்வுகளையும் வைத்துக்கொண்டு தீர்மானம் எடுக்கக்கூடிய நிலைமையில் தமிழர்கள் இல்லை என்பதுதான் உண்மை.

பல தசாப்தங்களாக பௌத்த மேலாதிக்கச் சிந்தனைகளால் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் சிறுபான்மை மக்களான தமிழ் மக்கள் தெற்குத் தலைமைகளால் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டே வந்திருக்கின்றார்கள். பல சந்தர்ப்பங்களில் தெற்குத் தலைமைகள் வாக்குறுதிகளை வழங்கித் தமிழ் மக்களை ஏமாற்றியிருக்கின்றார்கள். தமிழ் மக்களின் பலமாக இருந்த ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரும், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைளைச் செவிமடுக்க தெற்குத் தலைமைகள் தயாராக இருக்கவில்லை. திட்டமிட்ட பௌத்த மயமாக்கல், காணி அபகரிப்புகள், திட்டமிட்ட குடியேற்றங்கள் எனத் தமிழ் மக்களின் இனப் பரம்பலைச் சிதைக்கும் செயற்பாடுகள் நூதனமான முறையில் அரங்கேற்றப்பட்டே வந்தன. இவை முழுவீச்சில் முன்னெடுக்கப்படாது தடுக்கப்பட்டமைக்குப் பிரதான காரணமாக இருந்தது தமிழ் மக்களின் அரசியல் பலமும், அதன்மூலம் சர்வதேசத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஊடாட்டங்களுமே.

தமிழ் மக்களின் இருப்பைத் தக்கவைக்கவும், அரசியல் உரிமைகளை வென்றெடுக்கவும் தமிழர்களுக்கான அரசியல் பலமான நிலையில் இருப்பது மிகவும் அவசியம். தமிழர்களுக்கான பிரதிநிதித்துவத்தை தெற்குக்கு வழங்குவதால் உரிமைக்கான பேரம்பேசும் பலம் சிதைக்கப்படும் என்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும். எமக்கான பிரதிநிதித்துவத்தைத் தெற்குக்குத் தாரைவார்த்தே மாற்றத்தை ஏற்படுத்தமுடியும் என்ற மாயைக்குள் சிக்கிக்கொள்ளாது, எமக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தை எமக்காகக் குரல் கொடுத்த, கொடுக்கும் எம்மவர்கள் மத்தியில் இருந்து தேர்ந்தெடுப்பதே தமிழ் மக்களின் இருப்பைக் காப்பாற்றும் என்பதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். மாற்றத்துக்காக வாக்களியுங்கள், மாற்றார்களுக்கல்ல!



# பயண எச்சரிக்கையை நீக்க அமெரிக்காவிடம் கோரிக்கை

### இலங்கை அரசாங்கம் விடுத்தது

கொழும்பு, நவ.13

**அறுகம்குடா தொடர்பில் அமெரிக்கா விடுத்த பயண எச்சரிக்கையை அந்த நாடு நீக்கிக்கொள்ளவேண்டும் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.
ஒக்ரோபர் 23 ஆம் திகதி அறுகம்குடாவில் தாக்குதல் இடம்பெறலாம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை விடுத்தது. அறுகம்குடாவில் சுற்றுலாப்பயணிகள் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் தாக்குதல் இடம்பெறலாம் என நம்பகத் தன்மைமிக்க தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் கூறப்பட்டது. இந்தத் தாக்குதல் எச்சரிக்கை குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன் நாடு இயல்பு நிலைக்குத் திரும்புவதையடுத்து குறித்த பயண எச்சரிக்கையை அமெரிக்கா நீக்கவேண்டும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

## வாக்கெடுப்பு நிலையங்களுக்கு கைபேசி கொண்டுசெல்லத் தடை

கொழும்பு, நவ.13
வாக்கெடுப்பு நிலையங்களுக்கு கைபேசி, ஆயுதங்கள் உள்ளிட்ட பொருள்களை எடுத்துச்செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. அதற்கமைய வாக்கெடுப்பு நிலையத்தில் புகைப்படம் எடுத்தல், காணொலி பதிவு செய்தல் போன்ற செயற்பாடுகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது என்றும் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. ரத்நாயக்க தெரிவித்தார். (ச-இ)

## சொகுசு வாகனம் சுஜீவ ஒப்படைப்பு

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்கவிடம் இருந்த சர்ச்சைக்குரிய வாகனம் நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறித்த வாகனத்தை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குறித்த சொகுசு ரக வாகனம் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஒருவரினால் 2010 ஆம் ஆண்டு அனுமதிப்பத்திரத்துடன் கொண்டுவரப்பட்டு ஐந்து மாதங்களுக்கும் மேலாகப் பதிவு செய்யப்படாது பயன்படுத்தப்பட்டிருந்ததாக தெரியவந்துள்ளது. (ச-இ)

## தேர்தல் கடமையாளர்களின் விவரங்களை ஒப்படைக்குக



கொழும்பு, நவ. 13
நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் வாக்குச்சாவடிகளிலும், வாக்கெண்ணும் நிலையங்களிலும் கடமையில் ஈடுபடவுள்ள தமது பிரதிநிதிகளின் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.
அத்துடன் கண்காணிப்புக் கடமையில் ஈடுபடுவோர் அதிகாரிகளுடன் ஒத்துழைத்துச் செயற்படுமாறும் தேர்தல்கள் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது. (ச-25, 6)



## தரமற்ற மருந்துகள்; வாக்குமூலங்கள் பதிவு

அரசாங்க மருத்துவமனைகளுக்கு தரமற்ற மருந்துகளை விநியோகித்தமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பில் முன்னாள் அமைச்சர்கள் 18 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு மாளிகாகந்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கெஹெலிய ரம்புக்வெல சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கமைய அமைச்சரவையில் அங்கம் வகித்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, முன்னாள் அமைச்சர்களான திரான் அலஸ், மஹிந்த அமரவீர, விஜயதாஸ ராஜபக்ச, ஹரின் பெர்னாண்டோ, ரொஷான் ரணசிங்க, நிமால் சிறிபால மற்றும் அமைச்சரவையை பிரதிநிதித்துவப்படுத்திய 18 பேரிடம் வாக்குமூலங்கள் பெறப்படவுள்ளன. (ச-இ)

**நாளை**

**14.11.2024**

வியாழக்கிழமை - ஐப்பசி - 28

சுபநேரம் : 07.37 - 09.07
ராகுகாலம் : 01.37 - 03.07

**நாளொரு நல்வார்த்தை**

“பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது.”
-மார்ட்டின் லூதர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கல்வியே எங்களின் ஒளிவிளக்கு



## யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி:சிறிசற்குணராஜா தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ.13**

**போருக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்புவதில் பாடசாலைகளின் பங்கு முக்கியமானது. செயற்கரிய செயல்களைச் செய்யக்கூடிய வகையில் மனஉறுதி பெறுவதற்கும், தலைமைத்துவ ஆற்றலை வளர்ப்பதற்கும் பாடசாலைக் காலத்தை ஒவ்வொருவரும் சரிவரப் பயன்படுத்தவேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தெரிவித்துள்ளார்.**

யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் வைரவிழாவும் பரிசில் வழங்கல் நிகழ்விலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகள் மேன்மையானது, புனிதமானது. பாடசாலைகளில் கல்வி மாத்திரமல்ல இணைப்பாட விதானச் செயற்பாடுகளும் நடத்தப்படுவது மாணவர்களுக்குப் பயன்மிக்கதாக உள்ளது. குறிப்பாக வடக்கில் மகாஜனக் கல்லூரி போன்ற பாடசாலை மாணவர்கள் விளையாட்டுத் துறையில் பிரகாசித்து வருகிறார்கள்.

பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒளி விளக்குகள். ஆசிரியர்களின் சரியான வழிகாட்டல் இன்றேல் நாம் வாழ்க்கையில் உயரவோ, சாதிக்கவோ முடியாது. கிராமப் புறப் பாடசாலைகள் தற்போது சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்துகின்றன. தீயவைகளையும் பிரித்து எடுக்கும் மனப்பக்குவத்தை மாணவர்கள் பெற வேண்டும். சிந்தனை, சொல்,செயல் அனைத்தும் புனிதமாக அமைய வேண்டும். செயற்கரிய செயல்களைச் செய்யக் கூடிய வகையில் மன உறுதி பெறுவதற்கும், தலைமைத்துவ ஆற்றலை வளர்ப்பதற்கும் பாடசாலைக் காலத்தை ஒவ்வொருவரும் சரிவரப் பயன்படுத்தவேண்டும். கல்விக்கு எல்லை இல்லை. தற்போது நாம் வாழ்க்கை முழுவதும் கற்றுக்கொண்டிருக்கும் அளவுக்குப் புதிய புதிய தொழில்நுட்பங்களும், மாற்றங்களும் நாளுக்குநாள் உலகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, கற்பதுடன் மாத்திரம் நின்றுவிடாது கல்வியை நாம் எமது வாழ்க்கைக்கானதாக மாற்றிக் கொள்ளவேண்டும் - என்றார். (ச-66)






# குப்பை போடுவோருக்கு வருகின்றது 'ஆப்பு'

## யாழ்.மாநகரசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்ப்பாணத்தில் வீதியில் குப்பை போடுபவர்களை இனங்கண்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கையை யாழ்.மாநகரசபை ஆரம்பித்துள்ளது. ஓட்டுமடம் சந்தியிலிருந்து வட்டுக்கோட்டை ஊடாக காரைநகர் செல்கின்ற வீதியில் விலங்குக் கழிவுகள், மருத்துவமனைக் கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள் ஆகியன வீசப்படுவதனால், அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் கொட்டப்படுகின்ற கழிவுகளை உண்பதற்கு நாய்கள் செல்வதால் வாகன விபத்துகளும் ஏற்படுகின்றன.

குறித்த பகுதியை சி.சி.ரி.வி. கமராக்கள் பொருத்தி அதன் மூலம் 24 மணிநேரமும் கண்காணிக்கப்படவுள்ளது. கழிவுகளை கொட்டுவோர் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று யாழ். மாநகரசபை அறிவித்துள்ளது. (ரி-45-27)



# யாழ்.மாவட்ட செயலகத்தில் முன்னாயத்தச் செயலமர்வு

நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குப்பெட்டி விநியோகித்தல் மற்றும் கையேற்றல் கடமையில் ஈடுபடவுள்ள சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான செயலமர்வு யாழ்.மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. குறித்த செயலமர்வில் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் கலந்து கொண்டார். (ச-66-9)



மன்னாரில்

# தேர்தல் அலுவலர்களுடன் முன்னாயத்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.13

வாக்கெண்ணும் நிலையங்களுக்கான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான கலந்துரையாடல் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் வி.சிவராஜாவின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான க.கனகேஸ்வரன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் வாக்கெண்ணும் நிலையங்களுக்கான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் பங்கேற்றனர். (ச-60)

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், நவ.13

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-66)



# கசிப்புடன் ஒருவர் பேருந்தில் கைது

கிளிநொச்சி, நவ.13

பேருந்தில் பயணப்பொதியில் மறைத்து சூட்சுமமான முறையில் கசிப்பைக் கொண்டு செல்ல முற்பட்ட சந்தேகநபர் ஒருவர் தருமபுரம் பொலிஸாரால் நேற்று செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய விசுவமடுவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பேருந்திலேயே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து 26 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது. சந்தேகநபரை மேலதிக விசாரணையின் பின் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி. எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல் - 2025

**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு சொந்தமான கடைகளை ஒரே கொடுப்பனவு (Key Money) அடிப்படையில் வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.**

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | கடை விபரம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | பம்பைமடு கடைத் தொகுதி - கடை 01 | 7,000.00 | 2,000.00 | 10,000.00 | 2,520,000.00 |
| 2 | பம்பைமடு கடைத் தொகுதி - கடை 02 | 7,000.00 | 2,000.00 | 10,000.00 | 2,520,000.00 |
| 3 | பம்பைமடு கடைத் தொகுதி - கடை 03 | 7,000.00 | 2,000.00 | 10,000.00 | 2,520,000.00 |
| 4 | பம்பைமடு கடைத் தொகுதி - கடை 04 | 7,000.00 | 2,000.00 | 10,000.00 | 2,520,000.00 |
| 5 | பம்பைமடு கடைத் தொகுதி - கடை 05 | 7,000.00 | 2,000.00 | 10,000.00 | 2,520,000.00 |
| 6 | பம்பைமடு கடைத் தொகுதி - கடை 06 | 7,000.00 | 2,000.00 | 10,000.00 | 2,520,000.00 |
| 7 | ஓமந்தை முன் வரிசை கடைத் தொகுதி (A9 வீதி அருகே) - கடை 01 | 3,650.00 | 2,000.00 | 10,000.00 | 1,314,000.00 |
| 8 | ஓமந்தை முன் வரிசை கடைத் தொகுதி (A9 வீதி அருகே) - கடை 02 | 3,650.00 | 2,000.00 | 10,000.00 | 1,314,000.00 |
| 9 | ஓமந்தை முன் வரிசை கடைத் தொகுதி (A9 வீதி அருகே) - கடை 03 | 3,650.00 | 2,000.00 | 10,000.00 | 1,314,000.00 |
| 10 | ஓமந்தை முன் வரிசை கடைத் தொகுதி (A9 வீதி அருகே) - கடை 04 | 3,650.00 | 2,000.00 | 10,000.00 | 1,314,000.00 |
| 11 | ஓமந்தை பின் வரிசை கடைத் தொகுதி (A9 வீதி அருகே) - கடை 01 | 3,500.00 | 2,000.00 | 10,000.00 | 1,260,000.00 |
| 12 | ஓமந்தை பின் வரிசை கடைத் தொகுதி (A9 வீதி அருகே) - கடை 02 | 3,500.00 | 2,000.00 | 10,000.00 | 1,260,000.00 |
| 13 | ஓமந்தை பின் வரிசை கடைத் தொகுதி (A9 வீதி அருகே) - கடை 03 | 3,500.00 | 2,000.00 | 10,000.00 | 1,260,000.00 |
| 14 | ஓமந்தை பின் வரிசை கடைத் தொகுதி (A9 வீதி அருகே) - கடை 04 | 3,500.00 | 2,000.00 | 10,000.00 | 1,260,000.00 |

- கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் :- 2024.11.13 - 2024.11.28 பிற்பகல் 1.30 வரை
- கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் :- 2024.11.28 பிற்பகல் 02.00 மணி வரை
- கேள்விப் பத்திரம் திறக்கப்படும் நேரம் :- 2024.11.28 பிற்பகல் 02.15 மணி

**கேள்வி நிபந்தனைகள்**

1. கேள்விதாரர் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும் என்பதுடன் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
2. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதம். தேசியஅடையாள அட்டை மற்றும் அதன் நிழற் படப் பிரதி. கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிட சான்றிதழ் என்பவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி "செயலாளர். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. நேரியகுளம் வீதி. நெளுக்குளம். வவுனியா" என்ற முகவரிக்கும். ஒரு பிரதி பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர். பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். பூங்கா வீதி. வவுனியா" என்ற முகவரிக்கும் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் கேள்விப் பெட்டியினுள் இடமுடியும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராகக்" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் தவறுநராக அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தங்களது கேள்வித் தொகையினை எம்மால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
6. கேள்வி நிபந்தனைகள். அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை ஏற்கவோ. நிராகரிக்கவோ கேள்வி சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
7. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்பு பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
8. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
9. கடைகளை பெற்றுக் கொள்வோர் பொது சுகாதார நடைமுறைகளினை பின்பற்றுவதுடன் கடை மற்றும் அதன் சுற்றாடலில் உள்ள கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
10. குறித்த கடைகளில் வாகன திருத்தகம். இரும்பு ஒட்டு தொழிலகம். வெடி மருந்து உற்பத்திகள் விற்பனை. மீன். இறைச்சி கடை. அரைக்கும் ஆலை போன்ற கடைகள் நடாத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. மற்றும் ஓமந்தை கடைத் தொகுதிக்கு விண்ணப்பிப்பவர்கள் மேற்குறித்த கடைகளுடன் மரக்கறி கடைகளை நடாத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் அல்லது 024-2050067. மற்றும் 024-2225737 எனும் தொலைபேசி மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

(CR/43696) J-1



# நீரிழிவு நோயாளர்கள்

## கிளிநொச்சியில் இனங்காணல்

கிளிநொச்சி, நவ.13

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் உலக நீரிழிவு நோய் தினத்தை முன்னிட்டு நோயாளர்களை இனங்காணும் நடவடிக்கை கண்டாவளை பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் மாவட்ட தொற்றா நோய்ப்பிரிவின் மருத்துவர் க.ரஞ்சன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நோயாளர்கள் இனங்காணப்படவுள்ளதோடு, கண்டாவளை மருத்துவ அதிகாரி பிரிவில் குறித்த வாரத்தில் காலை 8.30 மணி வரை மக்கள் பரிசோதனையை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-45-113)

# பதிவற்ற வாகனங்கள் தொடரும் விசாரணை

கொழும்பு, நவ. 13

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், அமைச்சர்களின் வாகனங்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதில் பொலிஸ்மா அதிபர் நிகால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய கணக்காய்வு அதிகார சபையின் அறிக்கைப்படி சுகாதார அமைச்சு, கல்வியமைச்சு,தபால் திணைக்களம், ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றுக்கு சொந்தமான ஆயிரக்கணக்கான வாகனங்கள் காணாமல் போயுள்ளன. இது தொடர்பில் நாங்கள் இறுக்கமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அண்மையில் சட்டவிரோதமாக நாட்டினுள் வாகனங்களை எடுத்து வந்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பிரதியமைச்சர் லொகான் ரத்வத்தை மற்றும் அவரது மனைவி ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களது வாகனங்களுக்கான பதிவுகள் எதுவும் சுங்கத்திணைக்களத்தில் காணப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-25-6)

# மது அருந்திய இருவர் பலி

கொழும்பு, நவ.13

சட்டவிரோத மதுபானம் அருந்திய இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவதாக பிட்டிகல பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச்சம்பவம் காலி, பிட்டிகல பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பிட்டிகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாம்பழச் சின்ன வேட்பாளரின் வீட்டின் மீது நேற்றுத் தாக்குதல்!

யாழ்ப்பாணம், நவ. 13
மாம்பழம் சின்னத்தில் சுயேச்சையாகப் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருடைய வீட்டின் மீது வன்முறைக்கும்பல் ஒன்று நேற்று இரவு தாக்குதல் நடத்தியுள்ளது.

குறித்த வேட்பாளரின் வீட்டுக்குள் நேற்று மாலை அத்துமீறி உள்நுழைந்த வன்முறைக் கும்பல் அந்த வீட்டில் இருந்தவர்களைத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளது. தாக்குதலுக்கு உள்ளான ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர் வேட்பாளரின் தந்தை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வீட்டின் உடைமைகளும் அடித்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

சம்பவ இடத்துக்கு விரைந்த விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-125)

## சந்நிதியான் ஆச்சிரமத்தின் நிதியில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம்




யாழ்ப்பாணம், நவ.13
முல்லைத்தீவு அம்பகாமம் கிராம மக்களின் கோரிக்கைக்கு அமைவாகச் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தின் ஏழு இலட்சத்து 88 ஆயிரம் ரூபா நிதிப் பங்களிப்பில் புதிய சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் இயந்திரம் பொருத்தப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த திங்கட்கிழமை துணுக்காய் மகளிர் அமைப்புத் தலைவி கஜிதா தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் பங்கேற்புடன் நடைபெற்றது. (ச-66)

## கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரிப்பு



யாழ்ப்பாணம், நவ.13
யாழ். குடாநாட்டில் கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. கடல்கொந்தளிப்பால் மீனவர்கள் கடலுக்குச் செல்லாததால், சந்தைகளுக்கு குறைந்தளவு கடலுணவுகளே வந்துசேர்கின்றன. இதனால் பற்றாக்குறை நிலவுவதோடு, அவற்றின் விலையும் உயர்ந்து காணப்படுகின்றது. (ரி-45)

## 2,000 ஹெக்ரேயரில் சின்ன வெங்காயச் செய்கை

யாழ்ப்பாணம், நவ.13
யாழ். குடா நாட்டில் எதிர்வரும் பெரும்போகத்தின் போது சுமார் 2ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் சின்ன வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அடுத்தமாத இறுதியில் சின்ன வெங்காயச் செய்கை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் விவசாயிகள் செய்கைக்கான விதைகளை தற்போது பெற்றுவருகின்றனர்.

இதேவேளை குடாநாட்டில் சின்ன வெங்காயத்தின் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது. சந்தையில் வெங்காயம் கிலோ 300 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-17)




## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், நவ.13
காரைக்கவி கந்தையா பத்மானந்தன் எழுதிய சீத்துவக்கேடு என்ற 'தொலைந்துவிட்ட வாழ்வியல் நினைவுகள்' பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு நூல் அறிமுகவிழா நல்லை ஆதீன மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்றது. கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில்நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக ஜீவநதி சஞ்சிகை ஆசிரியர் க.பரணீதரன், எங்கட புத்தகங்கள் குழும நிறுவுநர் கு.வசீகரன், விருந்தினராக வட மாகாணப் பிரதம செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் காரைக்கவி சார்பில் பதிப்புத்துறையில் சாதனை படைத்து வரும் ஜீவநதி பதிப்பாசிரியர் கலாமணி பரணீதரனுக்கு 'பதிப்புச்சித்தர்' எனும் கௌரவப் பட்டத்தை ஆளுநர் வழங்கி வைத்தார். (ரி-45 -66)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18.02.1940
மறைவு 06.11.2022

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும்
நல்லூர் சிவன் புது வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் நவரட்ணம் கனகம்மா**

எம் முன்னே வாழ்ந்த தெய்வம் மறைந்து
ஆண்டிரண்டு ஆனதம்மா!
வலிகளை சுமந்து தனிமையில் அழுகின்றோம்
நினைவுகள் வருகையில் நிலைகுலைந்து நிற்கின்றோம்
நீ இல்லாமல் அரண்மனையாய் இருந்தாலும்
அனாதையாய் தவிக்கின்றோம்.....!
ஆயிரம் கடவுளின் வரமிருந்தாலும் தாயே
உந்தன் ஆசிர்வாதத்திற்கு ஈடாகுமா?

(cs.56648) (N-1)

62, சிவன் புதிய வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்றும் உம் நினைவில் [illegible]
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 11 . 1938
மறைவு 12 . 11 . 2024

**சின்னத்தம்பி சதாசிவம்**

(இளைப்பாறிய அதிகாரி உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரி)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சதாசிவம் அவர்கள் நேற்று (12.11.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வடிவேலு - பவளம் தம்பதியரின் மருமகனும், உமாதேவி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கிருபாலினி மற்றும் சிவபாலன் (டினேஸ் - லண்டன்), வசீதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பானுரேகா, சமீரா ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்விகன், மேக்னா, ஹரிசிவ் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், நடராசா மற்றும் சரஸ்வதி, இந்திராணி, சிவராசா, மகாலிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வைகுந்தவாசன், மற்றும் கெங்காதேவி, துவாரகன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2024) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 3.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 620 7744

(CS/56658) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை

13.11.2024
புதன்கிழமை

கனிவான முகத்துடன் கொடுக்கப்படும் பரிசு என்பது இரட்டிப்பு அன்பளிப்புக்கு சமமானது.

- தோமஸ் புல்லர்

# பசுமைக் கணினி

## 21ஆம் நூற்றாண்டின் இன்றியமையாத் தேவை



எஸ்.பாத்திமா அயாஷா
தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப ஆசிரிய பயிலுநர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

பசுமைக் கணினி என்பது அதன் உற்பத்தி, பயன்பாடு மற்றும் பயன்பாட்டு நிறைவு ஆகிய அனைத்து நிலைகளிலும் சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட கணினி அமைப்புகளைக் குறிக்கின்றது. இது கணினித் தொழிநுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய இரண்டையும் இணைக்கும் ஒரு முக்கியமான கருப்பொருளாகும்.

'புதியன புகுதலும் பழையன கழிதலும்' என்பது இன்றைய உலக நடைமுறையில் தவிர்க்கமுடியாத ஒரு விடயமாகும். தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் துறையிலேயே இந்த மாற்றங்கள் அதிகளவில் உணரப்படுகின்றன. இன்று பல புதியவற்றின் வருகையினால் பழமைகள் பின் தள்ளப்படுவதில் கணினிகள் முதலிடம் வகிக்கின்றன. நவீன வேகமான கணினிகள்; அதி நவீன அதிவேகமான கணினிகளின் வருகையால் பின் தள்ளப்படுகின்றன. இதனால் பழைய கணினிக் குப்பைகள் பெருக்கமடைகின்றன. இன்று பலராலும் பரவலாகப் பேசப்படும் 'புவி வெப்பமடைதல்' என்ற விடயத்திற்குப் பிரதானமான காரணமாக அமைவது இலத்திரனியல் கழிவுகளே! மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய விதத்தில் இலத்திரனியல் சாதனங்களால் சூழலிற்கு விடுவிக்கப்படும் சக்தி அல்லது சடப் பொருளே 'இலத்திரனியல் கழிவு' எனப்படுகின்றது. இலத்திரனியல் கழிவுகளை உருவாக்குவதில் கணினிகள் பிரதான இடத்தைப் பிடிக்கின்றன.

பசுமைக் கணினி தொடர்பாக முறையானதும் தெளிவானதுமான விளக்கத்தை முதன் முதலில் வழங்கியவர் மலேசியாவின் மல்ரி மீடியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சென்.முருகேசன் என்பவராவார். அவரின் கருத்தின்படி கணினித்திரை, வருடி, அச்சுப்பொறி போன்ற அனைத்து வன்பொருட்களையும் மற்றும் உதிரிப் பாகங்களையும் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பினை குறைக்கும் வகையில் அல்லது பாதிப்பே ஏற்படாத வகையில் உற்பத்தி செய்தல் முக்கியமானதாகும்.

கணினியின் பாகங்களில் ஏற்படும் பழுதுகளைச் சரி செய்து மீளவும் உபயோகித்தல், கணினியின் பாகங்களை வேறொரு வடிவத்தில் வேறொரு தேவைக்காகப் பயன்படுத்தல், பயன்படுத்த முடியாதவற்றை பாவனையிலிருந்து நீக்கி சூழலைப் பாதிக்காத வடிவத்திற்கு மாற்றுதல் போன்ற செயற்பாடுகள் பசுமைக் கணினியாக்கல் எனும் பகுதிக்குள் உள்ளடங்கும்.

**பசுமைக் கணினியின் முக்கியமான அம்சங்கள்**

பசுமைக் கணினி தொழில்நுட்பத்தின் முக்கியமான அம்சங்கள் சில கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

குறைந்த மின்சாரத்தில் கணினிகளைப் பயன்படுத்தல்: பசுமைக் கணினிகள் குறைந்த மின்சாரத்தை பயன்படுத்தி அதிக வேலைகளைச் செய்யும் வகையில் உருவாக்கப்படுகின்றன. இது மின்சார நுகர்வைக் குறைக்கின்றது.

மின்னணுக் கழிவுகளைக் குறைத்தல்: அடுத்த அம்சமாக மின்னணுக் கழிவுகளைக் குறைப்பதற்கு முயற்சி செய்யப்படுகின்றது. பசுமைக் கணினிகள் நீண்ட காலம் உழைக்கும் வகையில் வடிவமைக்கப்படுகின்றன. இதனால் மின்னணுக் கழிவுகளின் அளவு குறைகின்றது. சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத்தல்: பசுமைக் கணினிகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருட்கள் சுற்றுச் சூழலுக்கு எவ்வகையான பாதிப்பும் இல்லாமல் இருக்கும் வகையில் தெரிவுசெய்யப்படுகின்றன. இவ்வகைக் கணினிகளின் பயன்பாடானது சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும் மக்களிடையே பரப்புகின்றன. தொழிநுட்பம்: பசுமைக் கணினிகளில் திறமையான செயலிகள் மற்றும் அதியுயர் தரமான இலத்திரனியல் பலகைகள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் கணினியைப் பயன்படுத்தாத போது மின்சார நுகர்தலைக் குறைக்கக் கூடிய மின்சார சேமிப்புத் திட்டங்கள் பயன்படுத்தப் படுகின்றன. அத்துடன் கார்பன் நடுநிலை தரவு மையங்களும் பயன்படுத்தப்படுகின்றன. பசுமைக் கணினியானது பல்வேறு நன்மைகளைக் கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஆரோக்கியம், பணச்சேமிப்பு, கணினிச் சாதனங்கள் மற்றும் உபகரணங்களை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தல் மற்றும் மின்னணுக் கழிவுகளை முறையாக அகற்றல் போன்றவற்றை முக்கியமான நன்மைகளாகக் குறிப்பிடமுடியும்.



பசுமைக் கணினி தொழில்நுட்பம் தொடர்ந்தும் வளர்ந்து வருகின்றது. புதிய தொழிநுட்பங்கள், கண்டுபிடிப்புகள், புதிய கணினி அமைப்புகள் எதிர்காலத்தில் மேலும் பசுமைக் கணினியை சுற்றுச்சூழல் நட்புடையதாக மாற்றும். எதிர்காலத்தில் பசுமைக் கணினி நம் வாழ்க்கையின ஓர் அம்சமாக மாறும். பசுமைக் கணினி பயன்பாட்டிற்கு அரசாங்கத் தரநிலை, தொழில் தரநிலை மற்றும் சுயாதீன தரநிலை என மூன்று வகையான தரநிலைகள் பயன்படுத்தப்படுகின்றன. கணினி உற்பத்தியாளர்கள் மற்றும் கொள்வனவாளர்களால் பின்பற்றப்படவேண்டிய வழிகாட்டல்கள் மற்றும் நடைமுறைகள் அரசாங்கங்களினால் தீர்மானிக்கப்படுவதே அரசாங்கத் தரநிலை எனப்படுகின்றது. தொழில் தரநிலை என்பது தொழிற்சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் நிர்ணயிக்கும் தரநிலைகளைக் குறிக்கும். இவை கணினி உற்பத்தி மற்றும் தொழிநுட்பங்களுக்குக் குறிப்பிட்ட வழிகாட்டுதல்களை வழங்குகின்றன. சுயாதீனத் தரநிலையானது கணினி அமைப்புகளினால் ஏற்படுத்தப்படுகின்ற சுற்றுச்சூழல் தாக்கத்தை மதிப்பிடுவதற்கான முறைமைகளை வழங்குகின்றது.


இந்த வகையில் பசுமைக் கணினியானது தொழிநுட்ப உலகில் புதிய விடியலைக் கொண்டுவரும் ஒரு முக்கியமான விடயமாக மாற்றமடைந்து வருகின்றது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகிய இரண்டையும் சமன் செய்யும் முயற்சியாக இந்தப் பசுமைக் கணினிகள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி மைதிலி விசாகரூபன்,
பதில் நூலகர்
யாழ்.பல்கலைக்கழகம்

# தமிழர் அனைவருக்குமான தமிழியல் நூலகம்










யாழ்ப்பாணத்தில் பிறந்து சிங்கப்பூரில் வாழ்ந்து மறைந்தவரான 'நன்கொடைச் செம்மல்' கந்தையா கார்த்திகேசன் எழுதிவைத்த உயிலின் பிரகாரம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி தமிழியல் நூலகச் செயற்றிட்டம் கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது.

'தமிழியல் நூலகம்' எனும் பெயரிலான நூலகத்தை நிறுவும் பணிகள் பூர்த்தியடைந்த நிலையில் ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதி ஏறத்தாழ எண்ணாயிரம் நூற்சேகரிப்புகளுடன் தமிழியல் நூலகம் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசாவால் வாசகர்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் முன்னாள் துணைவேந்தர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், துணைவேந்தர்கள், நூலகர்கள், பண்டிதர்கள், தமிழியல் ஆர்வலர்கள், மாணவர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் திரளாக வருகை தந்து சிறப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழியல் நூலகத்திறப்பு விழாவையொட்டிக் காலை 8 மணிக்கு யாழ். பல்கலைக்கழகப் பரமேசுவரன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாட்டு நிகழ்வுகள் இடம்பெற்று தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்ட தமிழியல் நூலகத்தில் நன்கொடையாளரான சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசனின் உருவப்படம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. கந்தையா கார்த்திகேசனின் தாராள சிந்தையை நினைந்து ஆரிய திராவிட பாஷா பிவிருத்திச் சங்கத்தின் செயலாளரால் நன்றி நவிலல் வாழ்த்துப்பா இசைக்கப்பட்டது. தமிழியல் நூலக முன்றலில் துணைவேந்தர் மற்றும் தமிழியல் நூலகச் செயற்றிட்ட இணைப்பாளர் ஆகியோரால் நினைவு நாள் மரம் நாட்டப்பட்டது. 'தமிழியல் நூலகவாசலிலே கொன்றைமரம் பொன்பூச்சொரியவேண்டும்' என்ற ஆதர்சத்தோடு இந்த மரம் நாட்டும் வைபவம் இடம்பெற்றது. நீண்டகாலமாகவே கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தின் உறுப்பினராக இருப்பவரும், யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் திறப்பு விழாவுக்கு வருகை தந்து வாழ்த்துரை வழங்கினார்.

துணைவேந்தர் தனது உரையில், உலகம் முழுமையிலும் ஏறத்தாழ எழுபதுமில்லியன் மக்கள் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர், எனினும் ஈழத்தில் வாழும் நான்கு மில்லியன் மக்களுடனேயே தமிழணங்கு சிறப்பாக உயிர் வாழ்கின்றாள் எனக் குறிப்பிட்டார். நீண்டகாலமாகப் பயன்படுத்தமுடியாத நிதியைப் பயன்பாட்டு நிலைக்குக் கொண்டு வந்து தமிழியல் நூலகத்தை உருவாக்கி அதனைப் பயன்பாட்டிற்கு வழங்குவது என்பது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் முக்கியமானதொரு வரலாற்று நிகழ்வெனவும் குறிப்பிட்டார்.

இந்தத் திறப்புவிழா நிகழ்வின்போது, யாழ்ப்பாணப் பத்திரிகையுலகில் ஆரம்பகாலத்தில் கோலோச்சி நின்ற பழம்பெரும் பத்திரிகையான ஈழகேசரிப் பத்திரிகையின் சிறப்பு வெளியீடான ஈழகேசரி ஆண்டுமடல்களில் வெளிவந்த சீராக்கம் செய்யப்பெற்ற கட்டுரைகளைத் தாங்கிய பதிப்புநூல் வெளியிடப்பட்டதுடன் மேலும் வித்தகம், ஞாயிறு முதலான பழம்பெரும் வெளியீடுகளின் சொல்லடைவுகளும் துணைவேந்தரால் வெளியிடப்பட்டன. இந்த வெளியீடுகள் தமிழியல் ஆய்வுலகுக்குப் பெரிதும் நன்மைபயப்பன. தமிழியல் நூலக அரங்கநிகழ்வுகளின் வரிசையில் பாலபண்டித மாணவர்களின் 'பரிதாபத்தில் தமிழ்' எனும் தலைப்பிலான வில்லிசையும் மேலும் சமகாலத் திருமணநிகழ்வுகளில் காணப்படக்கூடிய கலாசாரப் பிறழ்வுகளைப் பிரதிபலிக்கும் 'அரோகரா' என்னும் தலைப்பிலமைந்த தனிநடிப்பும் இடம்பெற்றன. மகாஜனக் கல்லூரி ஆசிரியர் தவசோதிநாதன் தனிநடிப்பைத் திறம்பட நிகழ்த்தியிருந்தார்.






திறப்புவிழாக் கண்ட தமிழியல் நூலகமானது ஆரம்பித்து வைக்கப்பட்ட நாளிலிருந்தே பொதுசனங்களையும் உள்ளீர்த்துச் சேவை வழங்கத் தயாரென்பதற்கான குறிகாட்டியாக யாழ். மாநகரசபைப் பொதுநூலகத்தின் நடமாடும் நூலகசேவையும் இடம்பெற்றது. அத்துடன் வாசிப்பு மேம்பாட்டு விழிப்புணர்வு தொடர்பிலான 'தெருவெளி' ஆற்றுகையும் இடம்பெற்றது. யாழ். பல்கலைக்கழக நாடக அரங்கியல்துறை மாணவர்கள் இதனை நிகழ்த்தினர். விரிவுரையாளர் ஆர்.தவச்செல்வி இதனை நெறியாள்கை செய்திருந்தார். பொதுசனங்களையும் தன்னோடு வாரியணைத்துச் சேவைவழங்கத் தயாராகியுள்ள இந்தத் தமிழியல் நூலகம் பொதுமக்களிடமிருந்து எதிர்பார்ப்பது என்னவெனில், இந்த நூலகத்தை பொதுமக்கள் அனைவரும் பூரணமாகப் பயன்படுத்தவேண்டும் என்பதேயாகும் மேலும் எம் வரலாற்றையும் வாழ்வியலையும் எழுத்து நிலையில் பாதுகாக்கும் வகையிலான அரும்பெரும் நூல்களைப் பாதுகாக்கும் நோக்கோடு உருவாகியுள்ள 'யாழ்ப்பாணக் கருவூலம்' என்ற பகுதிக்குப் பொருத்தமாக ஆவணங்கள் பொதுமக்களின் வசம் இருப்பின் தமிழியல் நூலகத்தினரோடு தொடர்பு கொண்டு அவற்றை அழிந்து போகாது பாதுகாத்துக் கொள்ள முன்வரவேண்டும் எனவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசாதாரணங்களின் காலம்: மாற்குவின் போர்க்கால ஓவியங்களின் காட்சி






பஞ்சாட்சரலிங்கம் றேணுகா,
கலைவரலாறு, நுண்கலைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

"அசாதாரணங்களின் காலம்: மாற்குவின் போர்க்கால ஓவியங்கள்' என்ற தலைப்பின் கீழ் ஓவியர் மாற்குவின் ஓவியக்காட்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைவரலாற்று கற்கைப்புல மாணவர்களால் அண்மையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. உலக வரலாற்றில் போர்கள் எனப்படுவவை கலைகளின் போக்கு மாற்றங்களுக்கு பல்வேறு வழிகளில் காரணமாய் அமைந்துள்ளன. போர்கால ஓவியங்கள் என்பது எமது அன்றாட வாழ்வில் இருந்து வேறுபட்ட அசாதாரண விடயங்களைப் பதிவுசெய்வதுடன் வன்முறையின் அவலத்தையும் விடுதலை வேட்கையின் வெளிப்பாட்டையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. யாழ்ப்பாணத்தில் 1990களில் உக்கிரமடைந்த போர்க்காலச் சூழலை பதிவு செய்வதாக அ.மாற்குவின் ஓவியங்களின் காட்சி அமைகிறது.

யாழ்ப்பாணத்து கலைவரலாற்றில் முக்கியமான ஒருவராகக் கருதப்படும் அப்புஹாமி மாற்கு 1933-2000 ஓவியக் கலைப் பயிற்சியை ஓவியர் பெனட்டிக்கிடமும்; கொழும்பு நுண்கலைக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார். 1959-1967 வரையிலான காலத்தில் 'விடுமுறை கால ஓவியர் குழுவில்' இலவச வகுப்புகளைத் தொடர்ந்து நடத்தியதன்மூலம் யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர்களிடையே நவீன ஓவியக்கலையை பரிட்சயப்படுத்துவதில் பெரும் பங்கு வகித்தார். பாடசாலை சித்திரப்பாட ஆசிரியராக கடமையாற்றிய இவர் தமிழரின் விடுதலைப் போராட்டமும் அரச அடக்குமுறைகளும்; உக்கிரமடைந்த கால கட்டத்தில், ஓவியத்தினூடு தனது உணர்வுகளை வெளிப்படுத்தினார். மாற்குவின் கோட்டுப்படங்கள் திசை, அலை, காலம் போன்ற சிறுசஞ்சிகைகளில் வெளிவந்துள்ளதுடன் அவர் பற்றிய சிறப்பு வெளியீடானது 'தேடலும் படைப்புலகமும்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது.



மாற்கு பல்வேறு உள்ளடக்கங்களில் படைப்புகளை உருவாக்கியிருப்பினும் அவருடைய போர்க்கால ஓவியங்கள் மாத்திரமே இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள மாற்குவின் போர்க்காலப் படைப்புகள் கறுப்பு, வெள்ளை கோட்டுப்படங்களாக அல்லது விளக்கப்படங்களாக, சஞ்சிகைகளின் அச்சடிக்கப்பட்ட நிறத்தாள்களின் மீது வரையப்பட்ட ஓவியங்களாகவும் எண்ணெய் வர்ணக்கட்டிகளால் வரையப்பட்ட ஓவியங்களாகவும் அமைகின்றன. இதனை மூன்று பகுதிகளாகாகப் பிரித்து காட்சிக்கு வைத்துள்ளனர். அதில் முதலாவது அறையில் போரின் அவலத்தை நேரடியாகச் சித்திரிக்கும் படைப்புகளையும், இரண்டாவது அறையில் புராண இதிகாச பாத்திரங்களை ஒத்துணர்வுடன் நோக்கி போராட்டத்தினை நியாயப்படுத்துவதனூடாக அரச பயங்கரவாதத்தை விமர்சிக்கும் படைப்புகளையும், மூன்றாவது அறையில் போரின் விளைவுகளை மறைமுகமாக வெளிப்படுத்தும் படைப்புகளையும் காட்சிப்படுத்தியுள்ளனர்.

இடப்பெயர்வு, குண்டுவீச்சால் இறந்து போதல், தாய் மற்றும் குழந்தைகளின் அவலம், காணாமல் போதல், இழப்பு போன்ற பல காட்சிப்படுத்தல்களை முதலாம் பகுதியில் அவதானிக்கலாம். இரண்டாவது பகுதியில் புராண, இதிகாச கதைகளில் இந்து, கிறிஸ்தவ பாடுபொருளினை கையாண்டு வெளிப்படுத்தியுள்ளார். அதில் வரைபடத்தின் மீது ஹனுமான், இயேசு இறக்கும் போது அனுபவித்த துன்பங்களை போல தமிழ் மக்களும் துன்பப்படுகின்றனர் என்ற தொனிப்பொருளை பல உள்ளடங்கலால் வெளிப்படுத்தியுள்ளார். மாணவர்களால் பெரிதும் விரும்பப்படுபவையாகவும், ஓவியர்களால் அதிகம் பின்பற்றப்படக்கூடியவையாகவும் இந்த ஓவியங்களும் அவற்றின் கண்காட்சியும் அமைந்திருந்தன என்றால் மறுப்பதற்கில்லை.

# நவீன யுகத்தின் வெற்றிக்கு தோல்வியும், விடாமுயற்சியும்

பத்மசேனன் சனோசன் (பி.ஏ)




வெற்றிக்கான விதியுடன் இணைந்திருக்கும் உங்களுக்கு தோல்வி மற்றும் விடாமுயற்சி ஆகிய இரண்டும் ஒரே விதியுடன் இணைக்கப்பட்டிருப்பது ஒருவகை கவனத்தை ஈர்க்கும். தோல்வியானது ஒருவனை வீழ்த்துகின்றபோது அதற்குக் கைகொடுப்பது விடாமுயற்சி என்கின்ற நண்பனே. எனவே இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளது. வாழ்வில் வெற்றியை நோக்கி அடியெடுத்து வைப்பவர்களுக்கு தோல்வி தனது சுயரூபத்தை காட்டத் தவறியதில்லை. ஏதாவதொரு விடயத்தில் தோல்வி ஏற்படும் போது அதனை எந்த மனநிலையுடன் பார்க்கின்றோம் என்பது முக்கியமானது. சிலர் தோல்வியை, வெற்றியை நோக்கிச் செல்வதற்கான படிக்கல்லாக பார்க்கிறார்கள். ஆனால் பலர் தோல்வியில் துவண்டுபோய், வாழ்வில் விரக்தியடைந்து தவறான முடிவை எடுத்துவிடுகிறார்கள். இதில் நாங்கள் எந்தவகை மனிதராக இருக்கவேண்டும் என்பதை கவனமாகச் சிந்தியுங்கள். உயிருள்ள மனிதன்தான் வலியினை உணர்ந்து கொள்ளமுடியும், வெற்றியினை விரும்பும் மனிதனுக்குத்தான் தோல்வியின் ஆக்கிரமிப்பு அதிகமாக இருக்கும். எனவேதான் அதிலிருந்து மீண்டுகொள்வதற்கு வெற்றிக்கு இடையிலான தூரத்தினை குறைப்பதற்கும் ஏணிப்படியான விடாமுயற்சி அவசியமாகிறது. எவ்வளவு அதிகமான தோல்விகள் எங்களை ஆட்டம் காணச் செய்கிறதோ, அவ்வளவுக்கு வாழ்வில் நினைத்த வெற்றியை அடைய முடியுமான சக்தியும் கிடைக்கிறது. ஆபிரகாம் லிங்கன் இரண்டு முறை வியாபாரத்திற்காக முயற்சிகளை மேற்கொண்டு தோல்வி கண்டவர், எட்டுமுறை அரசியலில் தோற்கடிக்கப்பட்டார். ஆனால் அவர் விடாமுயற்சியினால் அமெரிக்காவின் ஜனாதிபதியாக உருவாகி சரித்திரம் படைத்தார். எப்படி நாம் விடாமுயற்சியை மேற்கொள்ளமுடியும்? விடாமுயற்சியை மேற்கொள்ளவில்லை என்றால் எப்படி உலகில் வெற்றியை அடைந்துகொள்ளமுடியும்? இயற்கை எல்லாவற்றையும் ஒருபடிமுறையில்தான் வைத்திருக்கிறது என்பதை உணருங்கள். "கடுமையாக விடாமுயற்சியுடன் உழைப்பதைத்தவிர வெற்றிக்கு வேறு வழியில்லை" என்கிறார் வால்டோ. மின்குமிழைக் கண்டுபிடித்த தோமஸ்அல்வா எடிசன் பாடசாலைக் கல்வியிலே தோல்வி கண்டார். பின்னர் மின்குமிழினைக் கண்டுபிடிப்பதில் ஆயிரம் தடவைக்கு மேல் தோல்வி கண்டார். அவரது விடாமுயற்சிக்கு கிடைத்த பரிசு இன்றுவரை அவரை மின்குமிழாக வாழ வைக்கிறது. உங்களுக்குள்ளும் தோல்வி பல்வேறு விடயங்களைச் சொல்லிவிட்டுச் செல்லுகின்றன. அதனை நாம் கவனமாகப் பரீட்சித்துப் பார்க்கவேண்டும். தேன் கூட்டிலிருந்து தேனை எடுக்கவேண்டுமாக இருந்தால், இலகுவில் எடுத்துவிடமுடியாது. தேனியின் தடைகளைத் தாண்டி, அவற்றின் சில தாக்குதல்களைத் தாண்டித்தான் தேனையே சுவைக்க முடிகிறது. அதே போன்றுதான் வெற்றிக்கனியை சுவைப்பதும். எனவே தோல்விகள் பலவற்றை கொடுத்து எங்களைத் தயார் செய்த பின்புதான் வெற்றியினை தகுந்த நேரத்தில் கொடுக்கின்றது.

"தோல்விக்கு விடாமுயற்சியால் தோல்வி கொடுப்போம்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கை நுண்ணறிவில் சற் ஜிபிரி



■ தங்கராசா விதுஷன்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

செயற்கை நுண்ணறிவு என்பது இன்று எல்லாத் தளங்களிலும் முக்கியமான பேசுபொருளாகக் காணப்படுகின்றது. மனிதர்களுடைய அறிவாற்றல் மற்றும் செயற்றிறன் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு கணனி மென்பொருட்கள் மூலம் உருவாக்கப்பட்டதே செயற்கை நுண்ணறிவாகும். குறிப்பாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமானது அனைத்துத் துறைகளிலும் முக்கியமானதாகவும் தவிர்க்கமுடியாததாகவும் காணப்படுகிறது. கல்வி, மருத்துவம், விளையாட்டு, வணிகம் போன்ற பல துறைகளுடனும் தொடர்புபட்டுள்ளது. மருத்துவத் துறை என்கின்ற போது நோய்களை அடையாளம் காண்பதற்கும், மருத்துவத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கும் உதவுகிறது. அதேபோல தொடர்பாடல் துறையைப் பொறுத்த வரையிலும் நமக்குத் தேவையான தகவல்களை உடனுக்குடன் பெறுகை செய்யக் கூடிய வாய்ப்புகள் இதில் காணப்படுகின்றன.

செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) என்கின்ற போது அதில் நரோவ் ஏஐ, ஜெனரல் ஏஐ, மெசின் லேணிங் போன்ற பல வகையான தொழில்நுட்பங்கள் காணப்படுகின்றன. இன்று நாம் அதிகளவில் மெசின் லேணிங் இனைப் பயன்படுத்துகின்ற தன்மை காணப்படுகிறது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகரிப்பதற்கு முன்பதாக தேடல் தளங்களின் பாவனை அதிகமாகக் காணப்பட்டது. ஆனால் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்த பின்னர் அதன் பயன்பாடு குறைந்துவிட்டது. தேடல் தளங்கள் என்று கூறுகின்றபோது கூகுள், மைக்ரோசொப்ட் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இன்று சற் ஜிபிரி இன் பயன்பாடு அதிகமாகவே காணப்படுகின்றது. குறிப்பாக கல்வி நடவடிக்கைகள், ஆய்வுகள், புதிய புதிய தேடல்கள் போன்றவற்றில் இதன் பயன்பாடு உலகளாவிய மட்டத்தில் இருந்து இலங்கை போன்ற நாடுகளிலும் காணக்கூடியதாக உள்ளது.

## அறிமுகமும் மேம்பாடும்

2022ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இது அறிமுகப்படுத்தப்பட்டது. மிக அண்மையில் இது பாவனைக்கு வந்தாலும் இன்று அதிகளவு பயனர்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஏராளமான தகவல்களை தன்னகத்தே வைத்து அந்தத் தகவல்களை பயனர்களுக்கு இலகுவாகக் கொடுக்கக் கூடிய தன்மை கொண்டது. தொழில்நுட்பத் துறையில் அதிக மாற்றத்தைக் கொண்டு வந்த பெருமைக்குரியதாகவும் இது காணப்படுகிறது. நாளாந்தம் புதியபுதிய விடயங்களை பெறுகை செய்யக் கூடியதாகவும் இதனுடைய செயற்பாடு அமைகின்றது. சற் ஜிபிரி இன் பயன்பாடு அல்லது அதனுடைய செயற்பாடு துரிதமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து உலகத்தில் ஜாம்பவான்களாக இருக்கக் கூடிய மைக்ரோசொப்ட், கூகுள் போன்ற நிறுவனங்கள் இதற்குப் போட்டியாக சில தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தன. குறிப்பாக கூகுள் நிறுவனம் 'பார்ட்' ஐ உருவாக்கியது. அதேபோன்று மைக்ரோசொப்ட் நிறுவனமானது 'கோபைலட்' போன்றவற்றை உருவாக்கியது. இவ்வாறாகப் பல நிறுவனங்கள் சற் ஜிபிரிக்கு போட்டியாக காணப்பட்டாலும் அது அதனுடைய பதிப்புகள் (வெர்ஷன்) அடிப்படையில் வளர்ச்சி அடைந்து செல்கின்றது. குறிப்பாக 3.5 பதிப்புகளை மக்கள் அல்லது பயனர்கள் இலவசமாக அணுகக் கூடியதாவுள்ளது. பின்னர் இன்று 4.0 பதிப்புகளை இலவசமாக மக்கள் அணுகக் கூடிய வாய்ப்பையும் கொடுத்துள்ளது. இதற்கான காரணம் 4.5 வெர்ஷன் வருவதற்கான செயற்பாடுகளை சற் ஜிபிரி மேற்கொண்டு வருகின்றது என்பதே.

இதற்குச் சவாலாக ஒருசில நிறுவனங்கள் சில செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களை உருவாக்கினாலும் அந்தத் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கு மக்கள் கட்டணம் செலுத்தவேண்டிய நிலை காணப்படுகின்றது. ஆனால் சற் ஜிபிரியை பொறுத்தவரையில் குறிப்பிட்ட சில வெர்ஷன்களை மக்கள் இலவசமாக அணுகுவதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளதால் அதனுடைய பயனர்கள் அதிகமாகவும் அதேபோன்று செயற்றிறன் உள்ள பெறுநர்களாகவும் காணப்படுகின்றனர். நாம் ஒரு விடயத்தை இலக்கணப் பிழை, சொற்பிழைகளுடன் கேட்டாலும் அதைப் புரிந்து கொண்டு நமக்கு தேவையான தகவல்களைத் தரக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கின்றது. ஒரு விடயத்தை பற்றி மீண்டும் மீண்டும் கேட்கின்ற போது அது பற்றியான விரிவான தகவல்களை தரக்கூடிய வாய்ப்பும் உள்ளது.

நமக்குத் தேவையான தகவல்களை மாத்திரம் அல்லாமல் நாம் அன்றாடம் பயணிக்கப் போகின்ற இடங்கள் அது தொடர்பான விடயங்கள் போன்ற பல்வேறுபட்ட விடயங்களையும் அறிந்து கொள்ளக்கூடிய தளத்தினை உருவாக்கியுள்ளது. அதுமட்டுமல்லாமல் நாம் ஒரு விடயத்தை கேட்டு அதை இன்னொரு மொழியில் மொழிபெயர்க்கக் கூடியதாகவும் சற் ஜிபிரி உள்ளது. அதேபோல நாம் கேட்கின்ற விடயங்களை ஓர் ஆவணமாக பெறுகை செய்யக்கூடிய வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. நாம் கேட்கின்ற தகவல்களை அதே தளத்தில் வாசித்துக் காட்டக்கூடிய ஒரு கேட்டல் சார் தொழில்நுட்பமாகவும் இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதில் தரப்பட்ட தகவல்களிலும் சில மாற்றங்களை உடனுக்குடன் மேற்கொள்ளக்கூடிய திறனை இது கொண்டுள்ளது. தகவல்கள், தரவுகள், வினாக்கள் போன்றவற்றை பெறுகைசெய்யக் கூடிய வகையில் காணப்படுகிறது.

## குறைபாடுகள்

இருப்பினும் இதில் சிக்கல்களும் சில குறைபாடுகளும் காணப்படவே செய்கின்றன. ஏனெனில் நாம் கேட்கின்ற விடயங்களை அப்படியே தரக்கூடிய வகையிலே அது வடிவமைக்கப்பட்டுள்ளது. நாம் கேட்கின்ற விடயங்களில் ஏதேனும் தவறு ஏற்படின் அது நமக்குத் தரக்கூடிய தகவல்களும் தவறாவதற்கான வாய்ப்புகள் காணப்படவே செய்கின்றன. 2021 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட குறியீட்டு தகவல்களை மாத்திரமே பயனர்களுக்கு வழங்குகின்றது. அதன் பின்னர் சற் ஜிபிரி க்கு தகவல்கள் வழங்கப்படவில்லை. இதனால் 2021ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தரவுகளின் அடிப்படையிலேயே பயனர்களுக்கு வேண்டிய விடயங்கள், தகவல்கள் போன்றவற்றை வழங்குகின்றது. நாளாந்தம் ஏற்படுத்தப்படுகின்ற அல்லது ஏற்படுகின்ற மாற்றங்களை இதில் பெறுகை செய்து கொள்வது கடினமானதாக உள்ளது. அதாவது இங்கே புதுப்பிக்கப்பட்ட தகவல்களை பெறுகை செய்துகொள்ள இயலாது. அதேபோல கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் இதனை பயன்படுத்துகின்றபோது தனியாக சற் ஜிபிரியில் உள்ள தரவுகளின் அடிப்படையில் மாத்திரம் நாம் ஒரு விடயத்தை அல்லது ஓர் ஆய்வை மேற்கொள்ளுகின்ற போது எந்தளவுக்கு அதனைப் பயன்படுத்தி உள்ளோம் என்பதனைப் புரிய வைப்பதற்கான சில தொழில்நுட்பங்களும் காணப்படவே செய்கின்றன. இது ஒருவகையில் ஒழுக்கநெறிக்குப் புறம்பான செயற்பாடு என்றே குறிப்பிட வேண்டும். எது எவ்வாறாயினும் கால ஓட்டத்துக்கு ஏற்ப இதன் பயன்பாடு அவசியமாகவே காணப்படுகின்றது. தற்காலத்தில் இதன் பயன்பாடு வளர்ச்சி அடைந்து வருகின்ற அதேவேளை எதிர்காலத்தில் இதன் பங்கு அளப்பெரியதாக அமையும் என்பது எவ்வித மாற்றமும் இல்லை. சற் ஜிபிரி தொழில்நுட்பங்கள் மாத்திரம் அல்லாமல் ஜெமினி, கோ பைலட் போன்ற செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களும் பயன்பாட்டில் உள்ளதனைக் காணலாம். குறிப்பாக ஜெமினியை பொறுத்தவரையில் ஒரு விடயத்தை பகுப்பாய்வு அறிக்கையாக பெறக்கூடிய தன்மை கொண்டது.

அதுபோல நான் கேட்கின்ற விடயம் பற்றியதான அறிவையும் பதிவு செய்யக்கூடிய தன்மையும் உண்டு.

அதனுடைய புதிய புதிய விடயத்தினுடைய நன்மை, அதனுடைய தீமை போன்ற பல விடயங்களையும் இதன் மூலம் பெறுகைசெய்யக் கூடியதாகக் காணப்படுகிறது. எனவே மேற்குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் இன்று ஏஐ தொழில்நுட்பத்தினுடைய வருகையின் மூலமாக புதிய புதிய மாற்றங்கள் மானுட வாழ்க்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மனிதனுடைய செயற்பாடுகள் எளிமைப் படுத்தப்பட்டுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

- தொழிநுட்ப உத்தியோகத்தர் (TO) HND or NCT - Civil with 2 years
- உதவி தொழிநுட்ப உத்தியோகத்தர் (TA) HND or NCT QS
- கணிய அளவையியலாளர் (QS) HND or NCT QS with 2 years
- உதவி கணிய அளவையியலாளர் (AQS)
- கணக்கு உதவியாளர் (Assistant Accountant)

சுயவிபரக்கோவையை Whatsapp/ Email மூலம் அனுப்பி வைக்கவும்.

**077 724 5399 (Whatsapp)**

**newstar1967@hotmail.com**

யாழ்ப்பாணம்.

(CS/1832 A) J-1

## மரண அறிவித்தல்

### நாகபாதம் ஜெயசுந்தரி



கல்வயலைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மத்தி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகபாதம் ஜெயசுந்தரி அவர்கள் நேற்று (12.11.2024) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், நாகபாதம் அவர்களின் அன்பு மனைவியும், ஜெயசோதி, ஜெயபால சுந்தரம், ஜெயராஜலிங்கம், ஜெயராணி, ஜெயகுமாரி, முருகதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நடேசமூர்த்தி, சரோஜினிதேவி, காலஞ்சென்ற பராசக்தி மற்றும் அருளம்பலம், முருகையா, அனுஷியா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2024) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**கண்டி வீதி,**
**நுணாவில் மத்தி,**
**சாவகச்சேரி.**

**077 623 6516**
**077 455 5556**

(CR/43698) J-1

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 08 . 05 . 1944

**மறைவு** 11 . 11 . 2024



### செல்லையா மகேஸ்வரி

**(ஓய்வுநிலை மருந்தாளர்)**

பன்னாலை ஆழ்வான்கிணற்றடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, பன்னாலை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மகேஸ்வரி (ஓய்வு நிலை மருந்தாளர்) அவர்கள் நேற்றுமுன்தினம் (11.11.2024) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சிவபாலன், சண்முகசுந்தரம் மற்றும் லகுதாதேவி, தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரி - சிவபாலன், குமாரதேவி - சண்முகசுந்தரம், மகேஸ்வரன், காலஞ்சென்ற சோமசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பகீரதன், Dr. சிவரதி - கேதீஸ்வரன், ஆகியோரின் அன்பு மாமியும் Dr. கலைச்செல்வி - முரளிதரன், Dr. நளாயினி - சுகிர்தன், Dr. பகவதி - வரதன், வாகீஸ்வரி, தர்ஷினி - குமரன், மகிந்தன், கமல்தாஸ் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.11.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பன்னாலை இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

**ஆழ்வான்கிணற்றடி,**
**பன்னாலை, தெல்லிப்பழை**

**மகிந்தன் (பெறாமகன்)** +94 779 093 820
**தவமணிதேவி (சகோதரி)** +61 470 580 282

## 2025 ஆம் ஆண்டு வரைவு வரவு செலவுத்திட்டம் கரைதுறைப்பற்று பிரதேசசபை முல்லைத்தீவு மாவட்டம்

**2025** ஆம் ஆண்டு வரைவு வரவு செலவுத் திட்டம் **1987** ஆம் ஆண்டின் **15** ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு **169** இன் கீழ் பொதுமக்கள் பார்வைக்காக, **2024.11.18** ஆம் திகதி தொடக்கம் **2024.12.02** ஆம் திகதி வரையிலான அலுவலக நாட்களில் காலை **8.30** மணி முதல் மாலை **4.15** மணிவரை தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள் (முல்லைத்தீவு, முள்ளியவளை, முள்ளிவாய்க்கால், செம்மலை, கொக்கிளாய்) மற்றும் பொது நூலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

**2025ம் ஆண்டு வரைவு வரவுசெலவுத்திட்ட அறிக்கை**

| | | |
|---|---|---|
| **வருமானம்** | | |
| சபையின் சொந்த வருமானம் | 84,033,216.00 | |
| அரசிறை மானியங்கள் நிர்வாக மீளளிப்புக்கள் | 74,061,625.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் | | **158,094,841.00** |
| **செலவினம்** | | |
| மீண்டெழும் செலவுகள் | 117,994,425.00 | |
| மூலதனச் செலவுகள் | 40,100,000.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த செலவினம் | | **158,094,425.00** |

**திருமதி இராசயோகினி ஜெயக்குமார்**
**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை.**
**2024.11.13**

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை - புத்தூர்
## பொது அறிவித்தல்
## மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பதற்கான கலந்துரையாடல்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதற்குரிய வட்டார ரீதியான பொது மக்களுடனான கலந்துரையாடல் பின்வரும் கால அட்டவணைப்படி நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றேன். இக் கலந்துரையாடலின் அடிப்படையில் பொது மக்களினால் முன்னுரிமைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களே 2025ம் ஆண்டுக்கான பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். எனவே வட்டார ரீதியாக கீழ் குறிப்பிட்ட தினங்களில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் குறித்த வட்டாரத்தினைச் சேர்ந்த பொது மக்கள் அனைவரும் கலந்துகொண்டு தங்கள் வட்டாரத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களினை முன்னுரிமைப்படுத்தி பிரதேச சபையின் எதிர்கால அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

| வட்டாரம் | வட்டார இல | கி.சே பிரிவு | திகதி | நேரம் | இடம் |
|---|---|---|---|---|---|
| ஊரெழு | 11 | J/267 | 16.11.2024 | 09.00 A.M | N.K.திருமண மண்டபம், ஊரெழு |
| உரும்பிராய் வடக்கு | 12 | J/264 | 16.11.2024 | 11.30 A.M | கற்பகப்பிள்ளையார் மணிமண்டபம், உரும்பிராய் வடக்கு |
| உரும்பிராய் மேற்கு | 18 | J/263 | 16.11.2024 | 02.30 P.M | திருக்குமரன் சனசமூக நிலையம், உரும்பிராய் மேற்கு |
| உரும்பிராய் தெற்கு | 17 | J/265 | 17.11.2024 | 09.00 A.M | அண்ணா சனசமூக நிலையம், உரும்பிராய் தெற்கு |
| உரும்பிராய் கிழக்கு | 13 | J/266 | 17.11.2024 | 11.30 A.M | யா/றோ.த.க பாடசாலை, உரும்பிராய் கிழக்கு |
| கல்வியங்காடு | 21 | J/259 | 17.11.2024 | 02.30 P.M | ஞானபாஸ்கரோதயா சனசமூக நிலையம், கல்வியங்காடு |
| இருபாலை | 22 | J/257 J/258 | 23.11.2024 | 09.00 A.M | வேளாதோப்பு பொதுநோக்கு மண்டபம், இருபாலை தெற்கு |
| கோப்பாய் தெற்கு | 20 | J/260 | 23.11.2024 | 11.30 A.M | J/260 கிராம சேவையாளர் அலுவலகம், கோப்பாய் தெற்கு |
| கோப்பாய் வடக்கு | 16 | J/262 | 23.11.2024 | 02.30 P.M | மாதர் சங்கம், கோப்பாய் வடக்கு |
| கோப்பாய் மத்தி | 19 | J/261 | 24.11.2024 | 09.00 A.M | வெள்ளெருவைப்பிள்ளையார் சனசமூக நிலையம், கோப்பாய் மத்தி |
| நீர்வேலி | 14 | J/268 J/270 | 24.11.2024 | 11.30 A.M | பொதுநோக்கு மண்டபம், நீர்வேலி மேற்கு |
| நீர்வேலி வடக்கு | 15 | J/269 | 24.11.2024 | 02.30 P.M | பொதுநோக்கு மண்டபம், நீர்வேலி வடக்கு |
| அச்சுவேலி மேற்கு | 03 | J/275 J/287 | 30.11.2024 | 09.00 A.M | கிராம அபிவிருத்தி சங்கம், அச்சுவேலி மேற்கு |
| பத்தமேனி | 02 | J/281 J/285 | 30.11.2024 | 11.30 A.M | யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம், பத்தமேனி |
| அச்சுவேலி தெற்கு | 04 | J/286 | 30.11.2024 | 02.30 P.M | ஸ்ரீ விக்னேஸ்வரா சனசமூக நிலையம், அச்சுவேலி தெற்கு |
| சிறுப்பிட்டி | 09 | J/271 J/272 | 01.12.2024 | 09.00 A.M | சிறுப்பிட்டி மேற்கு பொதுநோக்கு மண்டபம், சிறுப்பிட்டி |
| வளலாய் | 01 | J/282 J/283 J/284 | 01.12.2024 | 11.30 A.M | இடைக்காடு பொதுநோக்கு மண்டபம் |
| வாதரவத்தை | 06 | J/280 | 01.12.2024 | 02.30 P.M | வாதரவத்தை பொதுநோக்கு மண்டபம் |
| ஆவரங்கால் | 05 | J/276 J/277 | 07.12.2024 | 09.00 A.M | சிவகுரு சனசமூக நிலையம், ஆவரங்கால் மேற்கு |
| புத்தூர் கிழக்கு | 07 | J/278 | 07.12.2024 | 11.30 A.M | குருநாதர் சனசமூக நிலையம், புத்தூர் கிழக்கு |
| புத்தூர் மேற்கு | 08 | J/273 J/274 | 07.12.2024 | 02.30 P.M | மரக்கறி சந்தை, புத்தூர் மேற்கு |
| அச்செழு | 10 | J/279 | 08.12.2024 | 09.00 A.M | கிராம அபிவிருத்தி சங்க பொதுநோக்கு மண்டபம், அச்செழு வடக்கு |

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**
**13.11.2024**

(CR/43697) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுகம்பே தாக்குதல் திட்டம்; தகவல் குறித்து விசாரணை

கொழும்பு, நவ.13

அறுகம்குடாவில் இஸ்ரேலிய சுற்றுலாப்பயணிகள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டதாக அமெரிக்க நீதித்திணைக்களம் தெரிவித்துள்ளமை குறித்து விசாரணைகள் இடம்பெறும் என பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்டுவ தெரிவித்துள்ளார்.

அறுகம்குடா தாக்குதல் திட்டம் குறித்து தற்போது முன்னெடுக்கப்படும் விசாரணைகளின்போது அமெரிக்கா தெரிவித்துள்ள தகவல் குறித்தும் ஆராயப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

டொனால்ட் ட்ரம்பை கொலை செய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஆப்கான் நபர், இலங்கையில் இஸ்ரேலிய சுற்றுலாப்பயணிகள் மீது தாக்குதலை மேற்கொள்ளும் திட்டத்தை ஈரான் தன்னிடம் ஒப்படைத்திருந்ததாகக் கூறினாரென என அமெரிக்கா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## சுன்னாகம்

01. வலிதெற்கு பிரதேச சபையின் 2024ம் ஆண்டுக்கான கீழ்வரும் அலுவலக உபகரணங்களினை கொள்வனவு மேற்கொள்வதற்கு பிரதேச சபையின் பெறுகைகள் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்டட பெறுகைகளினை கோருகின்றார்.

| பெறுகை இலக்கம் | விபரம் | தொகை | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள சிவல் செலவு (மில்..ரூபாவில) | வேண்டப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41/15/03/05/ Photo Copy colour/2024 | Photo Copy Colour | 02 | 2.0 | 20000.00 | 12.02.2025 |
| NP/14/41/15/03/05/ Laptop/2024 | Laptop | 05 | 2.0 | 20000.00 | 12.02.2025 |
| NP/14/41/15/03/05/ Tap/2024 | Tap | 04 | 0.5 | 5000.00 | 12.02.2025 |
| NP/14/41/15/03/05/ Mulari Media Projector /2024 | Mulari Media Projector | 02 | 0.3 | 3000.00 | 12.02.2025 |

02. பெறுகைகள் அனைத்தும் தேசிய போட்டி விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.

03. ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகியொன்றை செயலாளர் வலிதெற்கு பிரதேசசபை காங்கேசந்துறை வீதி மருதனார் மடம் சுன்னாகம் (தொலைபேசி இலக்கம் 021-2240017, தொலைநகல் -021-2240327) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024 நவெம்பர் 13 ம் திகதியிலிருந்து 2024 நவெம்பர் 26ம் திகதி வரையான காலப்பகுதியில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணி வரையில் சமர்ப்பித்து ஒவ்வொரு விண்ணப்பங்களுக்கும் ரூபா 1000.00 வீதம் மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

04. தகுதியான கேள்விதாரர் தற்பொழுதும் செல்லுபடியாகவுள்ள வடக்குமாகாணத்திற்குட்பட்ட வியாபாரச்சான்றிதழுடன், கறுப்புப் பட்டியலில் தமது பெயர் வராதவராக இருத்தல் வேண்டும்.

05. விண்ணப்பதாரர் பெறுகை உள்ளடக்கம் பகுதி II இல் கூறப்பட்ட தகைமைகளினை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

06. வலிதெற்கு பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் 2024 நவெம்பர் 21ம் திகதி அன்று மு.ப. 11.00 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

07. 2024 நவெம்பர் 27ம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னர் "தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைக்குழு வலிதெற்கு பிரதேசசபை கன்னாகம்" எனும் முகவரியில் கிடைக்கும் வகையில் விலைமனுக்கல் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். அட்டவனையில் வழங்கப்பட்ட தகவல் பிரகாரம் விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

08. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகைளை எந்தவோரு நிலையிலும் விலைமனுக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு திணைக்களப் பெறுகைகள் குழுவின் தலைவருக்கு பூரண அதிகாரமுண்டு.

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைக்குழு
வலிதெற்கு பிரதேசசபை சுன்னாகம்
13.11.2024

(CR/43683) J-1


## பெயர் மாற்றம்

இல 141 அன்னை வேளாங்கண்ணித் தோட்டம், நாவலடி, அரியாலையில் வசிக்கும் **சிறில் கெலன்** ஆகிய நான் எனது பெயரை **சிறில் கெலன் புஸ்பராணி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சிறில் கெலன் புஸ்பராணி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**சிறில் கெலன் புஸ்பராணி**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18.09.1959

மறைவு 10.11.2019

### அமரர் சண்முகநாதன் கருணாகரன்
(கண்ணன் பத்தர்)

**திதி : திரயோதசி**

ஆண்டுகள் ஐந்து கடந்து சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம் குடும்பம் என்ற கோயிலில்
குலவிளக்காக திகழ்ந்த எங்கள் தெய்வமே!
மாண்டாலும், மறையாது
உங்கள் நினைவு என்றென்றும்.

**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

**குடும்பத்தினர்**
தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

(CR/43695) J-1

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 19 • 11 • 1933



இறப்பு 06 • 11 • 2022

கடந்த (06.11.2022) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### திருமதி
### சுப்பையா சிவபாக்கியம்

புன்முறுவல் பூத்த முகம்
பூரிப்புக் கொண்டவுள்ளம்
என்றுமே இனிமையுடன் எல்லோரையும்
கவர்ந்தவளல்லவோ அம்மா நீ!
எம்மை பெற்றெடுத்து வாழ்வின் வழிகாட்டியாய்
எம்மை பாசத்தோடு வளர்த்து விட்டீர்கள்
மூப்பின் பிணி காரணமாக எம்மைவிட்டு
பிரிந்து இரு வருடமாகிவிட்டதம்மா
எம்மை விட்டு பிரிந்தாலும் உங்களை
நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்து எம் இதயத்தில்
வைத்து பூசித்து வணங்குகின்றோம் அம்மா!
நீங்களும் நிச்சயம் எம்முடன் வாழ்ந்துகொண்டிருப்பீர்கள்
என நம்புகின்றோம்.

ஓம் சந்தி ! சாந்தி !! சாந்தி !!!

இல. 03,
ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் அமைதி வேண்டிப் பிரார்த்திக்கும்
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவையேற்பட்டால்...

பொதுத்தேர்தலை முன்னிட்டு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேர்தல் தினத்தன்று (நாளை) சட்டம் கடுமையாக அமுலில் இருக்கும். எனவே, அனைத்துத் தரப்புகளும் தேர்தல் சட்ட திட்டங்களை முறையாகப் பின்பற்றவேண்டும். தேர்தல் தினத்தன்று சட்டத்தை முறையாக செயற்படுத்துமாறு பாதுகாப்பு த்தரப்புகளுக்கும் உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. சட்டம், ஒழுங்கு நிலைநாட்ட பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். தேவையேற்படின் களமிறக்குவதற்காக முப்படைகளும் தயார் நிலையில் உள்ளன.
காலையிலேயே வாக்களித்துவிடுங்கள். வாக்களித்த பின்னர் வீடுகளுக்குச் செல்லுங்கள். பொதுஇடங்களில் ஒன்றுகூடி தேர்தல் விதிமுறைகளை மீறும் வகையில் எவரும் செயற்படக்கூடாது. தபால்மூல வாக்கெண்ணும் பணி மாலை 4.15 க்கு ஆரம்பமாகும். 14 ஆம் திகதி நள்ளிரவுக்குள் முதலாவது தேர்தல் பெறுபேற்றை வெளியிடமுடியும். வாக்கு உங்கள் உரிமை, அதனைக் கட்டாயம் பயன்படுத்துங்கள்' - என்றார். (அ-ம-44)

## முறைப்பாடு...

பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.
நேற்றுமுன்தினம் நள்ளிரவு வரை 2 ஆயிரத்து 999 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், நேற்றைய முறைப்பாடுகளையும் சேர்த்தால் இந்தப் பொதுத்தேர்தல் பரப்புரைக்காலத்தில் இதுவரை மூவாயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## 12 வாக்களிப்பு...

இதன்படி,
1. ஊர்காவற்துறை தேர்தல் தொகுதியில் வேலணை மத்திய கல்லூரி விடுதி வாக்களிப்பு நிலையம் சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலய நால்வர் மணிமண்டபத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

2. நாரந்தனை தெற்கு பொதுநோக்கு மண்டப வாக்களிப்பு நிலையம் நாரந்தனை தெற்கு கிராம சக்தி பொது மண்டபத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

3. வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலய மண்டப இல. 1 வாக்களிப்பு நிலையம் வடலியடைப்பு சனசமூக நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

4. அராலி வடக்கு அமெரிக்க மிஷன் பாடசாலை வாக்களிப்பு நிலையம் அராலி இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

5. காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் வசாவிளான் மத்திய கல்லூரி மண்டப இல. 2 வாக்களிப்பு நிலையம் பலாலி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

6. மானிப்பாய்த் தொகுதியில் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மண்டப இல. 1 வாக்களிப்பு நிலையம் தாவடி தெற்கு சனசமூக நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

7. கோப்பாய்த் தொகுதியில் அச்சுவேலி மத்திய கல்லூரி மண்டப இல. 2 வாக்களிப்பு நிலையம் அச்சுவேலி ஆரம்ப பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

அச்சுவேலி விக்னேஸ்வரா சனசமூக நிலைய வாக்களிப்பு நிலையம் விக்னேஸ்வரா முன்பள்ளிக்கு மாற்றப்பட்டுள்ளது.

9. உடுப்பிட்டித் தொகுதியில் இமையாணன் மாந்தோட்ட சிவஞான வைரவர் ஆலய மண்டப வாக்களிப்பு நிலையம் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

10. கரணவாய் சக்கலாவத்தை பொது நோக்கு மண்டபத்தில் இயங்கிய வாக்களிப்பு நிலையம் கொற்றாவத்தை செட்டித்தறை சித்தி விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

11. நல்லூர்த் தேர்தல் தொகுதியில் கொக்குவில் மேற்கு கிறிஸ்தவாலய தமிழ்க் கலவன் பாடசாலை மண்டப இல. 1 இல் இயங்கிய வாக்களிப்பு நிலையம் சிறிவீரமா பிடாரி அம்பாள் ஆலய மண்டபத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

12. நாவலர் கலாசார மண்டபத்தில் இயங்கிய வாக்களிப்பு நிலையம் அத்தியடி கணபதி கலாசார மண்டபத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. (அ-ம-26)

## கிணற்றிலிருந்து...

மீட்கப்பட்டுள்ளார். மயிலங்காடு, ஏழாலை தெற்குப் பகுதியைச் சேர்ந்த சுவாம்பிள்ளை வவி (வயது - 46) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-27)

## இலங்கைக்கு...

இந்திய மீனவர்கள் இலங்கையில் தொடர்ச்சியாகக் கைது செய்யப்படுகின்றமை தொடர்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே, இலங்கைக்கு எதிராக இந்திய மத்திய அரசாங்கம் கடும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று சீமான் வலியுறுத்தியுள்ளார்.
இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக எல்லைதாண்டி மீன் பிடிக்கின்றனர். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கூறியுள்ளார். இலங்கையில் தமிழர்களைச் சுட்டுக் கொன்றார்கள், வலைகளைக் கிழித்து எறிந்தார்கள், இதற்கு மேல் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்று சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.
இந்தியப் பெருங்கடல் என்றால் போதுமா? மீன் பிடிப்பதற்கு உரிமை இல்லையா?. இலங்கையை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு இலங்கை மீது இந்திய அரசு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். கச்சதீவை மீட்க வேண்டும். அதிகாரம் தமிழன் கைக்கு வரும் போது அனைத்தும் மாறும். வசதியாக பதுங்கியிருப்பதற்காக பாதுகாப்பாகக் கொண்டு வரப்பட்டதுதான் திராவிடம் என்றும் சீமான் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

## 12 இந்திய...

கடற்படையால் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களும் மயிலிட்டி கடற்கரை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். தொடர்ச்சியாக அவர்கள் பருத்தித்துறைநீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவர்கள் அனைவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம-66-100)

## அரசியல்...

அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பில் நாடளாவிய ரீதியில் அண்மைக்காலமாக பல்வேறு விவாதங்கள் ஏற்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி அநுர அரசியல் கைதிகளின் விடுதலை நிச்சயம் இடம்பெறும் என்றும் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-6)

## இலங்கைச்...

சிறையிடப்பட்டுள்ள நிலையிலேயே, தமிழக மீனவர்கள் இலங்கைச் சிறைக்குள் எந்நேரமும் இருந்து கொண்டிருக்க வேண்டும் என்ற கபடத்தனத்துடன் இலங்கை அரசாங்கம் செயற்படுவதாக அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.
தமிழக மீனவர்களினதும், இலங்கை மீனவர்களினதும் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்குடன் கடந்த மாதம் 29ஆம்திகதிமீனவர்பிரச்சினைக்கான இந்திய - இலங்கை கூட்டுப் பணிக்குழுவின் கூட்டம் நடைபெற்றது. அதில் மீனவர் சிக்கலுக்குத் தீர்வு காணும் வகையில் இரு நாட்டு மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் விரைவில் ஒன்று கூடி பேச்சுவார்த்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், கூட்டம் முடிந்து 13 நாட்களாகியும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படாதமை வருத்தமளிக்கிறது என்றும் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார். (அ-ம-இ)

## நெடுந்தீவின்...

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, யாழ்ப்பாணம் , குறிகாட்டுவான் நெடுந்தீவுக்கு இடையிலான விசேட படகுச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையில் குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு 7 படகுச் சேவைகள் இடம்பெறவுள்ளன. அதேபோன்று நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி காலை 6.45 மணி முதல் மாலை 4.30 மணி வரையிலும் படகுச் சேவைகள் இடம்பெறவுள்ளன என நெடுந்தீவு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.
நெடுந்தீவுக்கான வாக்குப் பெட்டிகள் இன்று புதன்கிழமை படகுகள் மூலம் எடுத்துச் செல்லப்படவுள்ளன. வாக்களிப்பு நிறைவடைந்ததும் அவை ஹெலிகொப்டர் ஊடாக எடுத்துவரப்படவுள்ளன. (அ-ம-26)

## தேர்தலை...

ஒப்படைக்கப்படும் என்று யாழ்.மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.
பொதுத்தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை செய்தியாளர் சந்திப்பு இடம்பெற்றது. யாழ்.மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன், யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி. அமல்ராஜ் ஆகியோர் இணைந்து இந்தச் செய்தியாளர் சந்திப்பை நடத்தினார்கள். இதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் இம்முறை 5 லட்சத்து 93 ஆயிரத்து 187 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 619 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத் தேர்தல் கடமைகளுக்காக 8 ஆயிரத்து 577 உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் ஆயிரத்து 634 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.
யாழ்ப்பாணத்தில் இதுவரை 62 தேர்தல் முறைப்பாடுகளும், ஒரு தேர்தல் வன்முறையும் பதிவாகியுள்ளன. (அ-ம-26)

## யாழ். மத்தியில்...

வத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுக் காலை 8 மணிமுதல் இந்தக் கள ஆய்வுப் பணிகள் இடம்பெற்றன.
யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ், வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ.ஜே.காளிங்க ஜெயசிங்க, யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார, யாழ்ப்பாணம் உதவிச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.
குறித்த கள ஆய்வில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் உட்புறப் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாகவும், வெளிப்புறச் சூழலில் வாகனப் போக்கு வரத்தை மட்டுப்படுத்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் விடுதலைகோரி பாம்பன் பாலத்தில் போராட்டம்

கொழும்பு, நவ.13



இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி தமிழக மீனவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை பாம்பன் பாலத்தில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தற்போது வரை தமிழக மீனவர்களின் 66 படகுகள் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளதுடன் 497 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்படும் மீனவர்கள், அந்நாட்டின் வெளிநாட்டு மீன்பிடி தடைச்சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றங்களில் வழக்குப் பதிவுசெய்யப்படுகிறது. இதில் 90 மீனவர்கள் ஆறு மாதங்கள் முதல் இரண்டு ஆண்டுகள் காலம் வரையிலும் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டு இலங்கை சிறைகளில் தண்டனைக் கைதிகளாக உள்ளனர் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று இராமேஸ்வரம்- மதுரை தேசிய நெடுஞ்சாலையில் இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக சாலையை மறித்துப் போராடினர். (ச-இ)

# ஜே.வி.பி.படுகொலை விசாரணை அவசியம்

## முன்னிலை சோஷலிசக்கட்சி வலியுறுத்து

கொழும்பு, நவ. 13
ஜே.வி.பி. ஸ்தாபகர் ரோகண விஜேவீரவினதும் ஏனைய உறுப்பினர்களினதும் கொலை பற்றி விசாரணை நடத்துமாறு முன்னிலை சோஷலிசக்கட்சி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
ரோகண விஜேவீரவினால் உருவாக்கப்பட்ட ஜே .வி.பி. 1971 ஆம் ஆண்டு அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டது. ஜே .வி.பி. யின் ஆயுதப்புரட்சி இந்திய இராணுவத்தின் உதவியுடன் முறியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ரோகண விஜேவீர உட்பட ஜே .வி. பி.யின் முக்கியமான உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர்.
1977 ஆம் ஆண்டு ஜே.ஆர். பதவிக்கு வந்ததும் சிறை வைக்கப்பட்டிருந்த ஜே .வி.பி. உறுப்பினர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.ஜே .வி.பி. அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டு அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தது.
1989 ஆம் ஆண்டு மறுபடியும் ஜே .வி.பி. அரசாங்கத்திற்கு எதிராக தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட வேளையில் ரோகண விஜேவீர உட்பட சிரேஷ்ட உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டு கொல்லப்பட்டனர். ஜே .வி. பி. தற்போது இரண்டு கட்சிகளாகப் பிரிந்துள்ளது. தேசிய மக்கள் சக்தி அநுரகுமார தலைமையில் இயங்கி வருகிறது. முன்னிலை சோஷலிசக்கட்சி குமார் குணரட்ணம் தலைமையில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது. குமார் குணரட்ணம் தலைமையிலான முன்னிலை சோஷலிசக்கட்சியே ரோகண விஜேவீரவின் கொலை பற்றி விசாரணை நடத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளது. (ச-6-சி)

# இணைய மிரட்டல் 2000 வரை பதிவு

இலங்கையில் இந்த வருடத்தில் மாத்திரம் 2000 இணைய அச்சுறுத்தல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு தெரிவித்துள்ளது.
இணையக் குற்றச் செயல்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அண்மைக் காலமாக 9 ஆயிரத்து 500 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த குழுவின் பொறியியலாளர் சாருகா தமுனுபொல தெரிவித்தார்.
இவற்றில் 981 வழக்குகள் பாலியல் துஷ்பிரயோகத்துடன் தொடர்புட்டவை. இணைய மோசடிகள் சம்பந்தப்பட்ட 1600 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கடற்கரை துப்புரவு

யாழ்., நவ.13
யாழ். குருநகர் கடற்கரையைச் சுத்தம் செய்யும் நிகழ்வு 'சேவ் ஏலைவ்' ஏற்பாட்டில் 'எமது அழகான கடற்கரையோரத்தை மீட்டெடுக்க ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளில் கடந்த சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெற்றது. (ச-45-66)

# பொதுத்தேர்தலை முன்னிட்டு விசேட போக்குவரத்துச்சேவை

கொழும்பு, நவ.13
நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு வாக்களிப்பதற்காக தூரப்பிரதேசங்களுக்குச் செல்லும் மக்களுக்காக விசேட போக்குவரத்து சேவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை போக்குவரத்து சபை தலைவர் ரமல் சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.
தேர்தல் பணிகளுக்காக போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் வாக்குப்பெட்டிகளுக்கு மொத்தம் 1,017 பேருந்துகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், தேர்தல் பணிகளுக்காக 290 பேருந்துகள் அந்தந்த கட்டண அடிப்படையில் பொலிஸாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.
தேர்தல் பணிகளுக்கான அதிகாரிகள் மற்றும் பொலிஸாரின் போக்குவரத்து முடிந்ததும், இந்தப் பேருந்துகள் பொதுப் போக்குவரத்துக்கு திரும்பும்.
அத்துடன் எதிர்வரும் நீண்டவார இறுதி விடுமுறையை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமை நீண்டதூர பஸ்சேவைகளை திட்டமிடுமாறு அனைத்து மாகாணடிப்போக்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.
அதேவேளை தேர்தலுக்காக தூரப் பிரதேசங்களுக்குச் செல்லும் மக்களுக்காக தினசரி ரயில் பயணங்களுக்கு மேலதிக பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே துணைப் பொது மேலாளர் என். ஜே. இடிபொல தெரிவித்தார். (ச-இ)

**வாடகைக்கு**
யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் இரண்டு பெண்கள் மட்டும் இருக்கக் கூடிய வீட்டின் பகுதி வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
**077 788 7360**

**மரண அறிவித்தல்**

அன்னை மடியில்
26 . 06 . 1938



ஆண்டவன் அடியில்
10 . 11 . 2024

**மனுவேற்பிள்ளை அருளப்பு (மரியதாஸ்)**
(சித்திரா அச்சக உரிமையாளர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மத்தி ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை அருளப்பு அவர்கள் கடந்த (10.11.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், சோமசுந்தரம் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மரியமதலேனா (ராணி) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற நல்லையா, மரியாம்பிள்ளை, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், லூசியா (சித்திரா - லண்டன்), பமிலா (சந்திரா - லண்டன்), இந்திரா (கனடா), செசிலியா, அல்பிறற் (செல்வம்), சுதாகர் (லண்டன்), யேசுதாஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனந்தராஜன் (லண்டன்), ஸ்ரிபன் (லண்டன்), யேசுதாசன் (கனடா), றமேஸ், சாரதாதேவி, சோயினி (லண்டன்), மாலினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிறிஸ்ரெல்லா - அருண், ஸ்ரெபான் - கெசினா, டிலன், டன்சி செறினா - சுதாகரன், டன்சன், ஸ்ரெபானி, யாஸ்மின், றோஷன், ஏற்றியன், சுபறம்யா ஏற்றினி, விதுஷன், காணுஷன், யானுஷன், கபிலன், பற்றிக், யஸ்ரின், லவின், கவிஷா ஆகியோரின் பேரனும், சஸ்மிகா, சஸ்விக், கேலன், செரிக்கா, அமரி காட்டர் ஆகியோரின் பூட்டனும் ஆவார்
அன்னாரின் பூதவுடல் இன்று (13.11.2024) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஏழாலை கிழக்கு, இசிதோர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

தகவல் : குடும்பத்தினர்
076 551 6743 (மகன்)
077 994 6376

(CS/1823) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] 36ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org